விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 16 வெள்ளிக்கிழமை (01.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## சீனியின் விலை ரூ.4ஆல் அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோ சீனியின் விலை 4 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், 101 ரூபாயாக இருந்த ஒரு கிலோ சீனியின் விலை 105 ரூபாயாக அதிகரித் துள்ளது. 23☛

## இந்திய பெருங்கடல் கருத்தரங்கு ஆரம்பம்

(கொழும்பு)

இந்திய பெருங்கடல் கருத்தரங்கு கொழும்பிலுள்ள பிரதமரின் அதி காரபூர்வ செயலகமான அலரிமாளி கையில் நேற்றுமாலை ஆரம்ப மானது. இரண்டு நாட்கள் நடைபெற வுள்ள இந்தக்கருத்தரங் 23☛

## இன்றும் நாளையும் மழை பெய்யும்

(கொழும்பு)

நாட்டில் அடுத்து வரும் இரு தினங்களில் காலநிலையில் மாற் றம் ஏற்படவுள்ளதாக வளிமண் டலவியல் திணைக்களம் தெரிவித் துள்ளது.

அதற்கமைய இன்றும் நாளை யும் நாட்டின் பல பாகங்களில் மழை யுடன் கூடிய காலநிலை 24☛

# இராணுவத்தினர் தண்டிக்கப்பட்டால்

# முன்னாள் போராளிகள்

# மீள தண்டிக்கப்படுவர்

## பகடைக்காய் வீசும் அமைச்சர் பாட்டலி



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களை மீளவும் சட்டத்தின் முன் நிறுத்துவதோடு, அவர்களை தண்டிக்க வேண் டிய நிலை ஏற்படுமென எச்சரித்துள்ள மேல் மாகாண மற்றும் நகர அபி விருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, தேசிய பாதுகாப்பினை நிலைநாட்டுவதற்காக செயற்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியாவுக்கு எதிராக யுத்தக்குற்றச்சாட்டு சுமத்தப்படுமாயின், வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள புலிகள் அமைப்பின் முக்கிய உறுப் பினர்களுக்கு எதிராகவும் சர்வதேச சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## இரு எறிகணைகள் மீட்பு



24☛

## புகையிரத சில்லுக்குள் நசியுண்டு குடும்பஸ்தர் பலி

### இறங்க முற்பட்டவேளை விபரீதம்



(யாழ்ப்பாணம்)

கனமான பையை தோளில் காவியபடி புகையிரதத்தில் இருந்து இறங்க முற்பட்ட குடும்பஸ்தர் ஒரு வர் நிலை தடுமாறி தண்டவாளத் தின் மேல் வீழ்ந்ததில் புகையிரத சில்லுக்குள் நசியுண்டு பரி 23☛

## அலிஸ் வெல்ஸ் - த.தே.கூட்டமைப்பு இன்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுள்ள தெற்கு மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் இன்று தமிழ்த் 23☛

## போர்க்குற்றச் சாட்டுக்களை பொருட்படுத்தத் தேவையில்லை

### சர்வதேச அழுத்தம் குறைந்து விட்டது – அமரவீர



(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் ஜெயசூரிய குறித்த போர்க் குற்றச்சாட்டுக்களை நாம்பொருட் படுத்தவேண்டிய அவசியமில்லை யெனவும், சிவில் அமைப்புகளும் ஒரு சில தனி நபர்களும் தெரிவிக் கும் கருத்துக்களை கருத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லையெனவும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 23☛

## இராணுவத்தினரை தண்டிக்க சர்வதேச நீதிமன்றத்துக்கு அனுமதி அளிக்கப்படாது

### புதிய நீதியமைச்சர் தலதா தெரிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்தியாகம் செய்து நாட் டைக் காப்பாற்றிய இராணுவத் தினரை தண்டிப்பதற்கு சர்வதேச நீதிமன்றங்களுக்கு எவ்வகை யிலும் அனுமதி அளிக்கப்படாது என நீதியமைச்சர் தலதா அத்து கோரளா தெரிவித்துள்ளார். 23☛

## 20 மாவட்டங்களில் வரட்சி 18 இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டின் வடக்கு கிழக்கு மாகா ணங்களிலுள்ள மாவட்டங்கள் உள் ளிட்ட 20 மாவட்டங்களில் நிலவும் வரட்சிகாரணமாக 5 லட்சத்து 22 ஆயி ரம் குடும்பங்களை சேர்ந்த 18 லட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு மத்தியில் பாதிக் கப்பட்டிருந்த குடும்பங்களின் எண் ணிக்கையுடன் ஒப்பிடும் போது வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் 42 சதவீத அதிகரிப்பு காணப்படு கின்றது.

கடந்த ஜூன் மாத தரவுகளின் அடிப்படையில் பேரிடர் முகாமைத் துவ அமைச்சில் 11 மாவட்டங்களில், 2,44,857 குடும்பங்களை 24☛

## இந்திய மீனவர்கள் 76 பேர் நீதிமன்றால் நேற்று விடுவிப்பு



24☛

## இந். மீனவர்கள் 8 பேர் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படை யால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் நேற்று முன்தினமிரவு அத்துமீறி நுழைந்து நெடுந்தீவு கடற்பரப்பில் 23☛

# சிறுவன்மீது தாக்குதல்;

## பொலிஸார் மீது குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை பொலிஸார் தாக்கியதாக தெரிவித்து 14 வயது சிறுவன் வவுனியா பொது வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான்.

வவுனியா ஓமந்தை வேப்பங்குளத்தை சேர்ந்த சிறுவனே தனது தம்பியுடன் அரசமுறிப்பு குளப்பகுதியில் மாட்டை பிடித்து கட்ட சென்ற சமயம் இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக குறித்த சிறுவனும் தாயாரும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தாக்குதலுக்குள்ளான சிறுவன் தெரிவிக்கையில்,

நானும் 7 வயதுடைய தம்பியும் நேற்று (நேற்றுமுன்தினம்) அரசமுறிப்பு குளத்தினுள் எமது மாட்டை கட்டச்சென்ற சமயம் அங்கு சிவில் உடையில் வந்த 4 பொலிஸார் என்னை முழங்காலில் இருக்குமாறு பணித்ததுடன் முதுகில் அடித்தனர். பின்னர் கழுத்தில் கயிற்றைப்போட்டு தூக்கப்போவதாகவும் தெரிவித்தனர். இதனையடுத்து எனது தம்பி ஓடிச்சென்று அக்காவிடம் சம்பவத்தை தெரிவித்ததை அடுத்து அக்கா அம்மா மற்றும் அப்பா வந்து என்னை மீட்டுவந்தனர். எனக்கு உடல் வருத்தமாக இருப்பதால் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்தேன் என தெரிவித்தார்.

இதேவேளை தாயார் கருத்து தெரிவிக்கையில்,

நாம் மாடு வளர்க்கின்றோம். எமது மாடே குளப்பகுதிக்கு சென்றுள்ளது. அதனை கட்ட எனது மகன் சென்றுள்ளான். அப்போது அங்கு சிவில் உடையில் வந்த 4 பொலிஸார் எனது மகன் மீது கள்ளமாடு பிடிப்பதாக தெரிவித்து அடித்துள்ளனர்.

நாம் சம்பவ இடத்திற்கு சென்றதும் பொலிஸார் அருகில் உள்ள வீடொன்றிற்கு சென்று இளநீர் குடித்து விட்டு 2 மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டனர். எனது மகன் தற்போது அச்சமான மன நிலையில் உள்ளான். அந்த சம்பவத்தில் இருந்து அவன் இன்னும் மீளவில்லை. நானும் எனது கணவரும் கூலி வேலை செய்தே எமது 5 பிள்ளைகளையும் வளர்க்கின்றோம். இவ்வாறான நிலையில் எனது பிள்ளைகளுக்கு அவ்வாறு அடிக்க நான் பார்த்திருக்கமுடியாது. எனவே ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்ய அழைத்து சென்றேன். எனினும் அவர்கள் தாம் அவ்வாறு தாக்கவில்லை என தெரிவித்தனர்.

உடனடியாக நான் மகனை வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளேன். இந் நிலையில் மகனை வைத்தியசாலையில அனுமதிக்கவேண்டாம் என கிராம சேவகர் கூறினார். பின் விளைவுகள் தொடர்பில் யோசிக்குமாறும் அவர் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக எனக்கு அச்சமாக உள்ளது. பின் விளைவுகள் என்பது என்ன என்பதே தெரியாதுள்ளது. 5 பிள்ளைகள் உள்ளனர். ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமா என்பது தெரியாதுள்ளது என தாயார் கண்ணீருடன் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஓமந்தை பொலிஸாரிடம் கேட்டபோது, தமது பொலிஸ் உத்தியோகத்தர்கள் எவரும் தாக்கவில்லை என தெரிவித்தனர். (செ-250)

# வெளி.முதலீடுகள் 300 வீதம் அதிகரிப்பு!

(கொழும்பு)

2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2017ம் ஆண்டில், வெளிநாட்டு முதலீடுகள் நூற்றுக்கு 300 வீதம் அதிகரித்துள்ளதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன், 1000 ஏக்கர் அளவிலான தொழில்துறை வலயத்தை ஏற்படுத்த தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், வருங்காலத்தில் எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையங்கள் இரண்டை நிர்மாணிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## பொலிஸார் மீது வாள்வெட்டு

# 14 சந்தேக நபர்களுக்கும் 7ஆம் திகதி வரை மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 14 பேரையும் எதிர்வரும் 7ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

கொக்குவில் நந்தாவில் பகுதியில் கடந்த யூலை மாதம் 30ஆம் திகதி 10இற்கும் மேற்பட்ட இளைஞர் குழுவினரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்வதற்காக விசாரணைகளின் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தேடுதல் மேற்கொண்டுள்ளனர். இதன்போது தொடர்ச்சியாக சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் குறித்த சந்தேக நபர்கள் 14 பேரும் யாழ் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். காயமடைந்த பொலிஸார் இன்னும் நலமடையாத காரணத்தினால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு கட்டளையிடப்பட்டதுடன் அன்றைய தினம் வரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (செ-9)

# இந்.வெளி.அமைச்சர் உள்ளிட்ட ஐவர் குழு கொழும்பு வருகை



(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் ஐவர் அடங்கிய குழுவினர் புதுடில்லியிலிருந்து நேற்று மாலை 4.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நேற்று ஆரம்பமான இந்து சமுத்திர மா நாட்டில் கலந்துகொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் ஐவர் அடங்கிய குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவை, இந்திய இலங்கை தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றனர். (செ-11)

# ஆங்கிலப் பயிற்சி; பதிவுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் STEPS Institute இனால் நடத்தப்படும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் மற்றும் பாடசாலை விடுகை மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறியின் புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பதிவுகளை எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை வரை அலுவலக நேரத்தில் யா/கனகரத்தினம் மத்தி மகா வித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) அமைந்துள்ள STEPS Institute இல் மேற்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 0212224580, 0212221395 என வட மாகாண கல்வி அமைச்சின் STEPS Institute அலுவலக நிர்வாகி அறிவித்துள்ளார். (செ)

# நல்லின பசுமாடு விபத்தில் மரணம்

(கரணவாய்)

பட்டா ரக வான் ஒன்று மோதியதில் வீதியைப் கடந்த நல்லின பசுமாடு ஒன்று பரி தாபகரமாக உயிரிழந்தது.

பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள மந்திகை மடத்தடிப் பகுதியில் நேற்று மாலை 6.45 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதியைக் கடக்க முற்பட்ட பசுமாட்டினை வேகமாகச் சென்ற பட்டா வாகனம் மோதிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. (செ-60)


1 நினைவலை

01.09.2017

ஆம் ஆண்டு

அமரர் வேலாயுதம் நிமல்ராஜ்



அன்னை மடியில்
12.11.1977

ஆண்டவன் அடியில்
27.08.2016

அன்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த-எம்
அன்புத் தெய்வமே காலனவன் ஒரு நொடியில்
உன்னைக் கவர்ந்தானோ கூடிழந்த
பறவைகளாய் தவிக்கின்றோம் நாம்
ஓர் ஆண்டு என்ன பல ஆயிரம் ஆண்டுகள்
சென்றாலும் ஆறாதையா உம் துயரம்
நெஞ்சில் உம்மை
இருத்தி நினைவில்
உம்மைச் சுமந்து
என்றும் வாழ்கின்றோம்

தகவல்:- குடும்பத்தினர்
(மைத்துனர்-மனோ)

82/07, பருத்தித்துறை வீதி,
3-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சண்முகம் லோகசிவம்



31.08.2017ஆம் திகதி, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட திரு.சண்முகம் லோகசிவம் (பொது சன தொடர்பு உத்தியோகத்தர் மாநகர சபை, யாழ்ப்பாணம்) (நிர்வாக சபை உறுப்பினர் யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக்குழு) அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பொது சேவை சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

(த-9478)

# ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிரான புதிய போர்க்குற்ற வழக்கை உன்னிப்பாக கவனிக்குமாறு ஜனாதிபதி மைத்திரி உத்தரவு



(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் தொடரப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்கு தொடர்பான விவகாரத்தை உன்னிப்பாக கவனிக்குமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் நடந்த சந்திப்பின் போதே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த தகவலை வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பின் போது, பிரேசிலுக்கான தூதுவராக பணியாற்றிய ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக பிரேசிலியாவில் தொடரப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்குத் தொடர்பாக, ஜனாதிபதியிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன.

அதற்குப் பதிலளித்த அவர், போர்க்குற்ற வழக்கை எதிர்கொள்வதில் இருந்து தப்பிப்பதற்காக ஜெனரல் ஜெயசூரிய, பிரேசிலில் இருந்து நாடு திரும்பவில்லை. பிரேசிலில் தூதுவராகப் பணியாற்றிய அவரது பதவிக் காலம் முடிந்து விட்டது. எனவே அவர் நாடு திரும்பினார்.

எனினும், இந்த விவகாரத்தை உன்னிப்பாக கவனிக்குமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தான் உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

## நான் போர்க்குற்றங்கள் செய்யவில்லை

### ஜெகத் ஜெயசூரிய மறுப்பு



(கொழும்பு)

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள யுத்த குற்றச்சாட்டுக்களை நிராகரிப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தெரிவித்தார்.

இறுதிக்கட்ட மனிதாபிமான நடவடிக்கையின் போது யுத்த குற்றங்களுக்கு அனுமதி வழங்கியதாக கூறப்படுவது உண்மையில்லை என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரேசிலில் இலங்கைத் தூதுவராக பணியாற்றிய முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக அங்குள்ள மனித உரிமைகள் அமைப்புக்களால் போர்க் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளை தாக்குதல், பொதுமக்களைக் கொலை செய்தல், கடத்திச் செல்லுதல் மற்றும் சித்திரவதை செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கட்டளையிட்டுள்ளதாக அந்த மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் நாடு திரும்பிய ஜெகத் ஜெயசூரிய தான் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளார்.(இ-7)

## ஜெகத் ஜெயசூரிய விவகாரம் முழு இராணுவத்தையும் காட்டிக்கொடுக்கும் அரசு

### மகிந்த கடும் விசனம்

(கொழும்பு)

30 வருடகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவந்தமை பெரும் பாவம் என்றே நினைப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவை போர்க்குற்ற விசாரணை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதன் மூலம் ஒட்டுமொத்த இராணுவத்தையும் காட்டிக்கொடுக்கும் செயற்பாட்டை நல்லாட்சி முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பதுளை கஹட்டரெப்ப பகுதியிலுள்ள விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய வழிபாடுகளில் முன்னாள் ஜனாதிபதி கல ந்து கொண்டார். இதன் பின் னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## போர்க்குற்றச்சாட்டை நிராகரித்தது அரசு

முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிரான போர்க்குற்றச் சாட்டை அரசாங்கம் நிராகரித்துள்ளது. யுத்தத்தில் நடந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு, வைக்கப்படும் இவ்வாறான குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக தெரிவித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ன, இராணுவ வீரர்கள் மேற்கொண்ட தவறுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய மீதான குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்டது. இதற்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இராணுவத்தினர், சித்திரவதைகளை மேற்கொள்ள இவர் காரணமாக இருந்ததாக தெரிவித்து பிரேசில் மற்றும் கொலம்பியாவில் உள்ள நீதிமன்றங்களில் தெற்கு அமெரிக்க மனித உரிமை அமைப்பு யுத்த குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

காணாமல்போதல் கொலை, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குறிப்பிட்ட சில தவறுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. யுத்தத்தின் போது நடந்தவற்றுக்கு இராணுவ தளபதி மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. யுத்தத்தின் போது நடப்பவை அனைத்தையும் சில தரப்பினர் மனித உரிமை மீறல்களாக கருதுகின்றனர். பொதுமக்களுக்கு எதிராகவன்றி, பயங்கரவாதத்திற்கு எதிராகவே யுத்தம் நடத்தப்பட்டு, அதில் வெற்றியும் பெறப்பட்டதாக அவர் தெரிவித்தார். (இ-7)

## போர்க்குற்றச்சாட்டுக்களை இராணுவமும் நிராகரித்தது



பிரேசிலுக்கான இலங்கையின் தூதுவராகப் பணியாற்றிய, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன நிராகரித்துள்ளார்.

கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட அவர், இதுகுறித்து கருத்து வெளியிடுகையில், "2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததில் இருந்து, இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெயசூரியவுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு, விடுதலைப் புலிகளின் கோட்பாடு, இலங்கையில் தோற்கடிக்கப்பட்டாலும், இன்னமும் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது" என அவர் தெரிவித்தார். (இ-7)

## மட்டக்களப்பில் மைத்திரி






மட்டக்களப்பு- கரடியனாறு பிரதேசத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று விஜயம் மேற்கொண்டார். மட்டக்களப்பு- பதுளை வீதியில் உள்ள கரடியனாறில் 81.4 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விவசாய சேவைக்கால பயிற்சி நிலையத்தைத் திறந்து வைப்பதற்காகவே ஜனாதிபதி அங்கு விஜயம் மேற்கொண்டார். மட்டக்களப்பில் ஜனாதிபதிக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டதுடன் பல கலை நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளன.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (இ-7)

## விராட் ஹோலி, ரோகித் சர்மா கலக்கல் சதம்

# கொழும்பிலும் வெற்றிக்கொடி கட்டியது இந்தியா




அணித் தலைவர் ஹோலி, ரோகித் ஆகியோரின் கலக்கலான சதம் கைகொடுக்க, இந்திய அணி 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை ஊதித் தள்ளியது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

இந்திய அணி ஏற்கெனவே தொடரை (3:0) கைப்பற்றிவிட்ட நிலையில், 4ஆவது ஒரு நாள் போட்டி நேற்று கொழும்பில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் ஹோலி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இந்திய அணியில் ஜாதவ், சகால், புவனேஷ்வருக்குப்பதில் குல்தீப் யாதவ், மணிஷ் பாண்டே இடம்பிடித்தனர். வேகப் பந்து வீச்சாளர் ஷர்துல் தாகூர் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

### ஹோலி சதம்

இந்திய அணிக்கு ஷிகர் தவான், ரோகித் ஜோடி ஆரம்பம் வழங்கியது. பெர்ணான்டோ 'வேகத்தில்' தவான் (4) ஆட்டமிழந்தார். பின், இணைந்த ரோகித், அணித் தலைவர் ஹோலி எதிரணி பந்துவீச்சை சிதறடித்தனர். டி சில்வா பந்துவீச்சில் ஹோலி இரண்டு பவுண்டரிகள் அடித்தார். தொடர்ந்து அசத்திய இவர் ஒரு நாள் அரங்கில் 29ஆவது சதம் எட்டினார். ஹோலி 131 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

### ரோகித் அபாரம்

மலிங்க பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரோகித், 13ஆவது சதம் கடந்தார். மத்யூஸ் பந்துவீச்சில் ஹர்திக் பாண்ட்யா (19), லோகேஷ் ராகுல் (7) சிக்கினர். ரோகித் 104 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மணிஷ் பாண்டே, தோனி இணைந்து அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்தனர். மலிங்க பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்டார் தோனி. மணிஷ் பாண்டே அரை சதம் கடந்தார்.

50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 375 ஓட்டங்கள் குவித்தது.

பாண்டே (50), தோனி (49) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### மோசமான ஆரம்பம்

கடின இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு டிக்வெல (14) சொதப்பினார். குசல் மெண்டிஸ் (1) ரன்-அவுட்டானார். முனவீர (11), திரிமன்னே (18) ஏமாற்றினர். பொறுப்பாக ஆடிய மத்யூஸ் (70) ஆறுதல் தந்தார். சிறிவர்தன (39), ஹசரங்க (22) ஓரளவு கைகொடுத்தனர். இலங்கை அணி 42.4 ஓவர்களில் 207 ஓட்டங்களுக்கு 'சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 168 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் பும்ரா, ஹர்திக் பாண்ட்யா, குல்தீப் யாதவ் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

### தோனி உலக சாதனை

ஒருநாள் போட்டி அரங்கில், அதிகமுறை 'நொட் அவுட்' துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் இந்தியாவின் தோனி (73) முதலிடம் பிடித்து உலக சாதனை படைத்தார். அடுத்த இடத்தில் இலங்கையின் சமிந்த வாஸ் (72, தென்னாபிரிக்காவின் பொலக் (72) உள்ளனர்.

---

## டெஸ்ட் தரவரிசை

# டேவிட் வோர்னர் 6ஆம் இடத்தில்



டாக்காவில் நடைபெற்ற பங்களாதேசுக்கு எதிரான முதல் டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் அருமையாக விளையாடி சதம் அடித்த அவுஸ்திரேலியாவின் வோர்னர், தரவரிசையில் 6ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பங்களாதேஷ் - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் டாக்காவில் நடைபெற்றது. பரபரப்பான இப்போட்டியில் பங்களாதேஷ் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவின் 2ஆவது இன்னிங்ஸில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய வோர்னர் 112 ஓட்டங்கள் குவித்தார்.

இப்போட்டியில் சதம் அடித்ததன் மூலம் டெஸ்ட் துடுப்பாட்ட தர வரிசையில் முதல் 10 இடத்திற்குள் முன்னேறியுள்ளார் வோர்னர். டாக்கா டெஸ்ட் ஆரம்பிப்பதற்கு முன் 11ஆவது இடத்தில் இருந்த வோர்னர், 5 இடங்கள் முன்னேறி 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித் 938 புள்ளிகளுடன் முதல் இடத்திலும் ஜோ ரூட் 902 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், கேன் வில்லியம்சன் 880 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் புஜாரா 876 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும் விராட் ஹோலி 806 புள்ளிகளுடன் 5ஆவது இடத்திலும் நீடிக்கிறார்கள்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிராக இரண்டு இன்னிங்சிலும் அரைசதங்கள் அடித்த தமிம் இக்பால் 6 இடங்கள் முன்னேறி 14ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிரான ஹெடிங்லே டெஸ்டில் சதம் அடித்த கார்லேஸ் பிராத் வெய்ட் 14 இடங்கள் முன்னேறி 16ஆவது இடத்தையும் ஷாய் ஹோப் 60 இடங்கள் முன்னேறி 42ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

---

## யு.எஸ்,. ஓபன்

# ரஷ்யாவின் அழகு புயல் ஷரபோவா முன்னேற்றம்




யு.எஸ்., ஓபன் டென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு ரஷ்யாவின் அழகு மங்கை மரியா ஷரபோவா முன்னேறினார்.

நியூயோர்க்கில் யு.எஸ்., ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் ரஷ்யாவின் ஷரபோவா, ஹங்கேரியின் டிமியாவை எதிர் கொண்டார்.

முதல் செட்டை 6-7 என பறிகொடுத்த ஷரபோவா, அடுத்த செட்டை 6-4 என வசப் படுத்தி பதிலடி தந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டிலும் அசத்திய ஷரபோவா 6:1 என கைப்பற்றினார்.

இரண்டு மணி நேரம் 19 நிமிடம் நீடித்த போட்டியின் முடிவில், ஷரபோவா 6-7, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் டென்மார்க்கின் வோஸ்னியாக்கி 2-6, 7-6, 1-6 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் மகரோவாவிடம் வீழ்ந்தார்.

மற்றைய போட்டிகளில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், ஸ்பெயினின் முகுருசா, போலந்தின் ரட்வன்ஸ்கா உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

### இஸ்னர் வெற்றி

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அமெரிக்காவின் ஜோன் இஸ்னர் 6-3, 6-4, 7-5 என்ற நேர் செட் கணக்கில் தென் கொரியாவின் ஹியுனை தோற்கடித்தார்.

மற்றைய போட்டிகளில் குரோஷியாவின் மரின் சிலிச், அமெரிக்காவின் ஷாம் குயரி உள்ளிட்டோர் வென்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தனர்.

---

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்செழு மத்தி நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-10.78)

---

# ரயன் ஜயலத் மீள மறியலில்

மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக்குக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத்தை எதிர்வரும் 13ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்குள் பலவந்தமாக புகுந்து அங்கிருந்த அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக இவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஊடகவியலாளருக்கு உயிர் அச்சுறுத்தல்

(கொழும்பு)

மட்டக்களப்பு - வாகனேரி, முள்ளிவட்டவான் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்ப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு மண் அகழ்வில் ஈடுபடும் கும்பலினால் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கும்பல் வீடியோ, கமரா மற்றும் தொலைபேசி போன்றவற்றை பலவந்தமான முறையில் பறித்து பல மணி நேரமாக கையகப்படுத்தி வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சேகரிக்கப்பட்ட காட்சிகளை வெளியிடக்கூடாது என அவர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக ஊடகவியலாளரினால் வாழைச்சேனை பொலிஸாருக்கு நேற்றுப் புகார் அளிக்கப்பட்டுள்ளதுடன், வாக்குமூலமும் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# க.பொ.த.உயர்தர தொழிற்கல்வித்துறைக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளுதல்

## வடமாகாண கல்விப் பணிப்பாளர் விசேட அறிவிப்பு

13 வருட உறுதிப்படுப்பட்ட கல்வி கொள்கைக்கான வேலைத்திட்டமாக திட்டமிடப்பட்ட க.பொ.த.உயர்தர தொழிற்றுறைப் பிரிவினை (Vocational Stream) பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தவுள்ள வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. பின்வரும் ஐந்து பாடசாலைகளுக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

பாடசாலையின் பெயர்- யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வலயம்– தென்மராட்சி, பாடசாலை தொடர்புக்கு - 021 227 0350, வலய தொடர்புக்கு-021 227 0013, கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி- வலயம்– கிளிநொச்சி, பாடசாலை தொடர்புக்கு -021 228 5115, வலய தொடர்புக்கு- 021 228 5826, மு/ வித்தியானந்தா கல்லூரி - வலயம்- முல்லைத்தீவு, பாடசாலை தொடர்புக்கு- 021 206 1040, வலய தொடர்புக்கு- 021229 0017, மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி- வலயம்-மன்னார், பாடசாலை தொடர்புக்கு-023 222 2321, வலய தொடர்புக்கு- 023 222 2286, வ/ காமினி மகா வித்தியாலயம்- வலயம்- வவுனியா தெ.வலய தொடர்புக்கு 024 222 2373

2016 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியமை மாத்திரமே மாணவர்கள் இவ்வுயர் தரப்பிரிவில் இணைவதற்கு தகைமையாக வரையறுக்கப்பட்டுள்ளது. ( சித்தி சித்தியின்மை கருதப்படவில்லை)

குறிப்பிட்ட நிலையப் பாடசாலைகளின் ஊட்டப்பாடசாலைகளில் 2016 இல் சாதாரண தரம் கற்ற பிள்ளைகளுக்கு இப்பிரிவில் இணைவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏனைய அயற் பாடசாலை மாணவர்களும் இப்பிரிவில் இணைவதற்கு விண்ணப்பிப்பின் , வேண்டப்படும் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களும் இணைக்கப்படுவார்கள்.

மாணவர்கள் குறித்த பாடசாலையில் அல்லது வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். இவர்களுக்கான கற்கைகள் 2017 ஒக்டோபர் மாதம் முதல் வாரம் ஆரம்பமாகும்.

இரு வருடக்கற்கையான இவ்வுயர்தரப் பிரிவு தொழிற்றுறைக்கல்விக்கான அங்கீகாரம் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தேசிய சர்வதேச ஏற்றுக் கொள்தகு தொழிற்றகைமை உடைய சான்றிதழ் வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே 2016 இல் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய குறிப்பாக ஏனைய உயர் தரப்பிரிவுகளில் இணைய முடியாத மாணவர்கள் இவ்வுயர்தர தொழிற்றுறைப்பிரிவில் இணைந்து கற்று பயனடையுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்த அமெரிக்காவின் பதில் உதவி ராஜாங்கச் செயலர்





தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நினைவு தீபம் ஏற்றினார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அனைத்துலக நாளை முன்னிட்டு, கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பெருமளவில் இந்த நிகழ்வில் ஒன்று கூடியிருந்தனர்.

இந்த நிகழ்வில், இலங்கை வந்துள்ள தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வெல்ஸ், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர், அதுல் கெசாப், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி போல் கொட்பிறி உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவாக, தீபம் ஏற்றப்பட்டது. அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர், அமெரிக்க தூதுவர் உள்ளிட்டோரும் தீபங்களை ஏற்றி காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்தனர். (இ-7)

# மீள்குடியேற்ற பகுதிகளுக்கும் சிற்றூர்திச் சேவை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி தனியார் பேருந்து சேவையானது நாளை 2ஆம் திகதியில் இருந்து மீள்குடியேற்ற பகுதிகளுக்கும் தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளதாக வலி. கிழக்கு தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்தகாலத்திற்கு முன்னர் வலி.கிழக்கு பகுதிகளூடாகவும் சிற்றூர் சேவைகளானது இடம்பெற்று வந்திருந்தது. எனினும் பின்னர் அப் பகுதிகள் உயர் பாதுகாப்பு பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பின்னர் அப் பகுதிக்கான சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே தற்போது அப் பகுதிக்கான சேவைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலி. கிழக்கு தனியார் சிற்றூர்தி சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

இதன்படி மீள் சேவையில் ஈடுபடவுள்ள பகுதிகள் தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அச்சுவேலி பேருந்து நிலையத்தில் இருந்து சந்நிதி வீதியூடாக கற்றாட்டி சந்தியூடாக வளலாய் வடக்கு பாம்வீச் சந்தி சென்று அங்கிருந்து வளலாய் பிள்ளையார் கோவிலடி ஊடாக தம்பாலை சந்தியூடாக அச்சுவேலி யாழ்ப்பாண சேவை இடம்பெறவுள்ளது.

இதேபோன்று அச்சுவேலியில் இருந்து ஒட்டகப்புலம் ஊடாக மக்கோனா பாடசாலை சுதந்திரபுரம் சந்தி வசாவிளான் பாடசாலை வரைக்கும் மூளாய்க்காலை பாதை (773) தற்காலிகமாக மேற்குறித்த எல்லை வரைக்கும் சேவையினை ஆரம்பிக்கின்றோம் என அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-4)

## இராசி பலன்

01.09.2017
(ஆவணி 16, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05மணிக்கு
தசமி காலை 7.56 மணிவரை
பூராடம் முழுவதும்
சுபநேரம் 6.05 -7.35 மணிவரை
இராகுகாலம் 10.35 - 12.05 மணிவரை
ஹஜ் பெருநாள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம் | | ராகு, புத, சுக் |
| கேது | | | சூரி செவ் |
| சந் | சனி | | குரு |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், எடுத்தகாரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் கிடைக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம். சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எடுத்தகாரியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், காரிய அனுகூலம் உண்டு. டோசன மகிழுண்டு.

**கும்பம்:** பொது வாழ்வில் பாராட்டுப் புகழும் கூடும் நாள், பண வரவால் சந்தோசமடைவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், செய் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிறு விரயங்கள் ஏற்படலாம், அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

**சிம்மம்:** பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சிறப்பான நாள், சுபகாரியச் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு

**தனுசு:** மற்றவர்கள் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, சிந்தனை மிகுதியான நாள், இரவு, பகல் பாராது பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தனவரவு திருப்தி தரும் வகையில் அமையும், தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சகோதர வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களால் யாழ்.கோலியாக் கண்டு வித்தியாலயத்தில் சிரமதானத்துடன் கூடிய பாடசாலையையும் வகுப்பறைகளையும் அழகுபடுத்தும் செயற்றிட்டம் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் மற்றும் உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலனின் வழிகாட்டலில் அண்மையில் நடைபெற்றது.


(படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

## பக்திரச கீதங்கள் இசை நிகழ்வு இன்று

நவாலி அந்திரான் முருக மூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங் கட்கிழமை கொடியேற்றத்து டன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று வெள்ளிக் கிழமை கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் பக்தி ரச கீதங்கள் இசை நிகழ்வு மாலை 6.30 மணி முதல் இரவு 7 மணி வரை ஆலய பிரதான மண்டபத்தில் இடம் பெறும். (இ-3)

# ஆலயத்தில் திருட்டு! பொலிஸில் புகார்



(யாழ்ப்பாணம்)

ஸ்ரீஇருபாலை வேளா தோப்பு மதுரை மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. ஆலய களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த பெறுமதிவாய்ந்த ஒலிபெருக்கி சாதனங்கள் திருடப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகத்தினரால் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் களஞ்சியசாலை சுவரில் காணப்பட்ட வெற்றிடத்தினாலேயே உட்புகுந்து பொருட்கள் திருப்பட்டுள்ளன. ஆலயத்தில் நடைபெறவிருந்த சங்காபிசேகத்திற்கு ஆலய பூசகர் மற்றும் நிர்வாகத்தினர் பொருட்களை தயார் செய்த போதே ஒலிபெருக்கி சாதனங்கள் திருடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. இச்சம்பம் தொடர்பில், கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

# பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வகையில் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் புரட்டாதி மாதம் பின்வரும் பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன.

LED bulb assembling techniques and LED panel designing techniques, website designing techniques, Computer networking techniques

இப்பயிற்சி நெறியில் பங்குபெற விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் 06.09.2017 இற்கு முன்னராக கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு 021 226 4958 என்ற தொலைபேசி இலக்கத்தினை தொடர்பு கொள்ள முடியும் எனவும் கரவெட்டி பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# ஆன்மீக நிகழ்வில் வள்ளி திருமணம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டை மானாறு செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசா லையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று வெள் ளிக் கிழமை மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் இடம் பெறும்.

இதில் செல்வச்சந்நிதி ஆலய அறநெறி மாணவர்களின் பஜன், மதுரகவி காரை எம்.பி.அருளானந்தத்தின் பிரசங்கம், சுதுமலை முத்தமிழ் கலாமன்றம் வழங்கும் "வள்ளி திருமணம்" வில்லுப்பாட்டு என்பன இடம் பெறும். (இ-3)




# சிகை ஒப்பனையாளர் சங்க காரியாலயத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்க புதிய காரியாலயத் திறப்பு விழா நாளை மறுதினம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு குமரப்புலம் மூளாயில் இடம் பெறும்.

சி.அருட்செல்வம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார புனர்வாழ்வு அமைச்சர் திருமதி. அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் இமானுவேல் ஆனோல்ட், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், சமூக முன்னேற்றங்களின் சமாசத் தலைவர் சாந்தகுமார், வடமாகாண அழகுக்கலை சங்கங்களின் தலைவர் நாகராசா, யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் டிரட்சி யோதி க.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் ஆசியுரையினை சித்திவிநாயகர் மகா முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவர் சமூக யோதி சி.செல்லத்துரை வழங்குவார். (இ-3)

# கந்தபுராண தொடர் சொற்பொழிவு

யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பாக சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கவிமணி அன்னைதாஸன் பஜனைக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வும் சொல்வேந்தர் பொன். சுகந்தன் வழங்கும் கந்தபுராணம் தொடர் சொற்பொழிவு நிகழ்வும் இடம்பெறும். (இ)

# கதம்ப இசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை, ஜேர்மன் கோத்தே நிறுவனம் மற்றும் சுவிஸ் தூதரகம் இணைந்து "செரன்டிப் மியூசிக் லாப்" எனும் ஓர் இசை நிகழ்வினை யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நாளை சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடத்தவுள்ளன. இலங்கை, சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மிகச் சிறந்த இசைக் கலைஞர்கள் கலந்து இவ் இசை நிகழ்வை இலவசமாக வழங்குவர். (இ)

# உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டிக்கு விண்ணப்பிக்குமாறு வடக்கு முதலமைச்சர் அமைச்சினால் கோரல்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வடமாகாண முதலமைச்சரின் அமைச்சினால் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டிக்கு மாணவர்களை விண்ணப்பிக்குமாறு முதலமைச்சர் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

"நிலைபேறான சுற்றுலாத் துறை, அபிவிருத்திக்கு ஓர் கருவி" (Sustainable Tourism – a Tool for development) எனும் தலைப்பில் குறித்த கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில், தற்போது கல்வி கற்று வருகின்ற தரம் 9 ஆம் 10ஆம் மற்றும் 11ஆம் வகுப்பு மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும். ஒரு மாணவர் ஒரு கட்டுரையை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

எழுதப்படும் கட்டுரை 350 சொற்களுக்கு குறையாமலும் 400 சொற்களுக்கு கூடாமலும் மேற்படி தலைப்பிற்கமைய, வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.

கட்டுரை எழுத பயன்படுத்தப்படும் தாள் A4 (8.27 " 11.69") அளவில் வெள்ளை நிறத்தாளாக இருத்தல் வேண்டும். ஒரு தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுத வேண்டும். கட்டுரை எழுதுவதற்கு நீல நிற பேனா மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

கட்டுரை எழுதிய மாணவரின் பெயர், தரம், பாடசாலை முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன தனியான ஒரு தாளில் குறிக்கப்படுவதோடு, அத்தாளிலேயே வகுப்பாசிரியரும், அதிபரும் மாணவரின் சுயமுயற்சியால் எழுதப்பட்டது என்பதை உறுதிப்படுத்தி, கட்டுரையுடன் இணைத்தனுப்ப வேண்டும்.


ஒரு பாடசாலையிலிருந்து ஆகக் கூடியது இரண்டு கட்டுரைகள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு, அதிபரின் உறுதிப்படுத்தலுடன் உரிய வலயக் கல்விப் பணிமனைக்கு எதிர்வரும் 12.09.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும்.

வலயக் கல்வி பணிமனையில் அவை புள்ளியிடப்பட்டு, வலய ரீதியில் முதல் மூன்று இடங்களைப்பெறும் கட்டுரைகள் மட்டும் வலயக் கல்விப் பணிப்பாளரின் விதப்புரையுடன், கீழ் உள்ள முகவரிக்கு நேரடியாக கிடைக்கக்கூடியவாறு, 19.09.2017 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர்,முதலமைச்சரின் அமைச்சு,வடமாகாணம் ஏ-9 வீதி, கைதடி,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும்

வலய மட்டத்தில் கட்டுரைகள் தெரிவு செய்யப்படும் போது எவ்வகையான பக்கச்சார்புகளும் இடம்பெறவில்லை என்பதனை வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப் படுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் கட்டுரைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உலக சுற்றுலா தினம் - 2017 : மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி" என தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். இப்போட்டியில் வெற்றி பெறும் கட்டுரைகள் வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் சுற்றுலாத் துறை சார்ந்த வெளியீடுகளில் பயன்படுத்தப்படவுள்ளன.

இப்போட்டியின் முடிவுகளை முதலமைச்சரின் அமைச்சினால் நியமிக்கப்படும் நடுவர் குழுவே தீர்மானிப்பர். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு முதலாம் பரிசாக 15,000 ரூபாவும், இரண்டாம் பரிசாக 12,000 ரூபாவும் மூன்றாம் பரிசாக 8000 ஆயிரம் ரூபாவும் மற்றும் ஆறுதல் பரிசாக 3000 ரூபா வீதம் ஐந்து பரிசில்களும் அவற்றுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 021 205 7114 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)




புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்தியத்துடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் சி.தவலிங்கம் மங்கல விளக்கேற்றுவதனையும் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவரும் கந்தமுருகேசனார் சனசமூக நிலையத் தலைவருமான மு. ஜெகதேவன் தலைமையுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

104

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்தில் ஆர்ப்பாட்டப்பேரணி நடந்து மகஜர் கையளிப்பும் இடம்பெற




யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் யாழ்ப்பாணம் கண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகளும் தத்தம் பாடசாலை முன்றலில் கூடி அமைதியான முறையில் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து 20.05.2015 அன்று மாணவர்கள் ஒரு மணிநேரம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முடியுமென வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

20 ஆம் திகதி யாழ். குடாநாடு முழுவதிலும் பதற்றம் நிலை கொண்டிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் தங்களின் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இதுதவிர ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான இளைஞர்கள் மோட்டார் சைக்கிள்களில் ஊர்வலமாகச் சென்றனர். அவர்களின் கைகளில் உருவப் பொம்மைகள், புகைப்படங்கள், பதாகைகள் இருந்ததைக் காணமுடிந்தது.

இப்படியாக எல்லாம் சுமுகமாக நடந்ததாயினும் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் கதிரவன் மேற்றிசையில் சாய்ந்தது போல் பேரணியும் தனது இலக்கை- இலட்சியத்தை சாய விட்டது.

## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

ஆம், 20.05.2015 அன்று பிற்பகல் ஒரு மணியளவில் பல திசைகளிலும் வந்த பேரணியினர் யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முன் வீதி வழியாக யாழ். நீதிமன்றத்தை நோக்கிச் செல்லலாயினர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ். மத்திய கல்லூரி வீதி ஆகியன பொலிஸாரால் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் வீதித்தடையில், இரண்டு மூன்று பொலிஸாரே காவலில் நின்றமையால் பேரணியில் வந்தவர்கள் தடைகளைத் தாண்டி யாழ்ப்பாண நீதிமன்றத்தை நோக்கி நகர்ந்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணி யாழ்ப்பாண நீதிமன்றத்தை நோக்கி நகர வேண்டிய தேவை என்ன? என்ற கேள்வி எழுவது இங்கு நியாயமானதே. அவ்வாறான கேள்விக்குப் பதிலும் இல்லாமல் இல்லை.

*19.05.2015* அன்று புங்குடுதீவில் உயர்மட்ட மாநாடு நடந்த போது மாணவி வித்தியாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்படும் சுவிஸ் குமார் கொழும்பில் நிற்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து மாநாட்டில் பெரும் களேபரம் ஏற்பட்டிருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் 20.05.2015 அன்று அதாவது புங்குடுதீவில் மாநாடு நடந்த மறுதினம் சுவிஸ் குமாரை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவேன் என்ற உறுதிமொழியை வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் எழுத்துமூலம் வழங்கியிருந்தார்.

மாணவி வித்தியாவின் கொலையுடன் இதுவரை ஒன்பதுபேர் சம்பந்தப்பட்டதாக நம்பப்படுகின்ற போதிலும் சுவிஸ் குமார் என்ற சந்தேக நபர் மீதே பொதுமக்களுக்குக் கடுமையான கோபம்.

வித்தியாவின் கொலையிலும் கூட்டு வன்முறையிலும் சுவிஸ்குமாரின் திட்டமிடலே இருந்ததாக மக்கள் கருதுவதால் சுவிஸ் குமார் எந்த வகையிலும் தப்பிச் செல்லக்கூடாது என்பதில் பொதுமக்கள் மிகவும் உறுதியாக இருந்தனர்.

பணபலம்; செல்வாக்குப் பலம் என்பவற்றின் துணைகொண்டு சுவிஸ் குமார் தப்பிவிடலாம் என்ற கோபத்தோடு இருந்த பொதுமக்கள் 2015 மே மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றில் சுவிஸ்குமார் முன்னிலைப்படுத்தப்படுவார் என்ற நம்பிக்கையோடு இருந்தனர்.

சுவிஸ்குமாருக்கு தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்திலும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் யாழ்ப்பாண நீதிமன்றத்தை நாடிச் சென்றிருந்தனர்.

எனினும் வடக்கின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினார்.

அவர் எழுத்து மூலம் கொடுத்த உத்தரவாதம் நிறைவேற்றப்படவில்லை. இதனால் பொதுமக்கள் ஆத்திரமடைந்தனர். கொழும்பில் நின்ற சுவிஸ்குமார் தப்பி விட்டதாகவே பேரணியில் இருந்தவர்கள் கருதியிருக்க வேண்டும்.

சுவிஸ்குமாரை பொலிஸார் கைது செய்யவில்லை; அவரை நீதிமன்றுக்குக் கொண்டு வரவில்லை என்ற ஆத்திரம் மேலிட கோசங்கள் பலத்தன.

எனினும் உண்மையாக- உணர்வுபூர்வமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் மனவெழுச்சியை கோசமாக வெளிப்படுத்தினரேயன்றி நீதிமன்றத்தைத் தாக்கும் எண்ணத்தைச் சிறிதும் கொண்டிலர்.

இருந்தும் பேரணியோடு நின்றவர்கள்- நீதிமன்றத்தைத் தாக்கினால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை அறியாத- பொறுப்பற்றவர்கள் மனதினுள் கறுப்பு வைத்து அவ்விடத்தில் நின்றதுதான் வேதனைக்குரிய விடயம்.

(திங்கள் வளரும்)



-புருசோத்தமன்-

# கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு விசேட நடவடிக்கை பிரிவினர் களமிறக்கம்





கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் அபாயநிலை காரணமாக சுகாதாரத் துறையினர் முழு வீச்சில் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு உதவியாக மன்னார் பிராந்திய தொற்று நோய் விஞ்ஞான மருத்துவ அதிகாரி சுதாகர் தலைமையிலான டெங்கு விசேட நடவடிக்கைப் பிரிவினரும் நேற்று களமிறங்கியுள்ளனர்.

இக்குழுவினரது ஆய்வுகளின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் வீடுகளில் காணப்படும் நீர்தேங்கக்கூடிய பாத்திரங்கள், பழைய போத்தல்கள் மற்றும் வீசியெறியப்படும் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றிலே டெங்கு நுளம்புகள் வளருவது கண்டறியப்பட்டுள்ளது.

ஆதலால் கிளிநொச்சி மாவட்ட மக்கள் தத்தமது வீடுகள் மற்றும் சுற்றுப் புறங்களில் காணப்படும் நீர் தேங்கக்கூடிய பொருட்களை உடனடியாக சேமித்து அகற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு அகற்றுவதற்குத் தேவையான உதவிகளை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வழங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை செய்யத்தவறும் பட்சத்தில் எதிர்வரும் மழை காலத்தில் பாரிய டெங்கு அனர்த்தினை கிளிநொச்சி மாவட்டம் எதிர்நோக்கலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (2-312)

# 20 வருடங்களாக உள்ளூராட்சிமன்றங்களில் ஆளணி உருவாக்கம் மேற்கொள்ளப்படவில்லை

## அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

வடக்கில் இருபது வருடங்களாக ஊழியர்கள் ஆளணி உருவாக்கம் மேற் கொள்ளப்பட வில்லை, இத னால் இருபது வருடங்களுக்கு முன் காணப்பட்ட சனத்தொகையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட் ஆளணியினரே தற்போதும் பணியாற்றி வருகின்றனர் என அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்த இருபது வருடங்களில் சனத் தொகை அதிகரித்திருக்கிறது, பிரதேச சபைகள்,நகர சபைகளாக அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும் அந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறது. தேவை களும், சேவைகளும் அதிகரித்துள்ளது. இப்படி எல்லாம் அதிகரித்த நிலையில் காணப்பட ஊழியர்களின் ஆளணி மட்டும் பழைய நிலைய்யிலேயே உள்ளது. இதனால் இருக்கின்ற ஊழியர்கள் பெரும் நெருக் கடிகளை சந்தித்து வரு கின்றனர்.

மேலும் ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு இன்னும் எட்டப் படவில்லை, பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை, பல வெற்றிடங்களுக்கு ஆளணி நிரப்படவில்லை. இந்த நிலைமை நீண்ட காலமாக தொடர்கிறது எனத் தெரி வித்த அகில இலங்கை அர சாங்க பொது ஊழியர் சங்கத்தினர்,

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் இன்னும் ஒரு வருடமும் ஒரு மாதமுமே இந்தக் காலத்திற்குள் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கையில்லை எனவும் தெரிவித்தனர்.

அத்தோடு தற்போதைய நிலைமைக்கு ஏற்ப ஆளணி உருவாக்கம் செய்யப்பட்டு ஊழியர்கள் உள்வாங்கப்ப டுவார்களாக இருந்தால் சுமார் மூவாயிரம் பேருக்கு வடக்கில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கமானது ஊழியர்களின் நலன்கள் சார்ந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

ஒரு தலை மைத்துவத்தின் கீழ் செயற்படுகின்றோம். எனவே அதனை குழப்பும் வகையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

எனவே நாம் இவர்களின் இவ்வாறான நடவடிக்கை தொடரும் பட்சத்தில் நீதிமன்றம் செல்வதற்கும் ஆலோசித்து வருகின்றோம் எனவும் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் உப தலைவர் அ.அன்ரனி, நிர்வாக ஆலோசகர் செ.இராசையா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா. இணைப்பாளர்களான ஆ.புண்ணிய மூர்த்தி, சி. சற்குணராஜா, ந.தேவகிருஸ்ணன், ஆ.சூரியகுமார் ஆகியோரும் கலந்துகொண்டிருந் தனர். (2-312)

## பிரமோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில் பிரமோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இதன்படி எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டை சப்பறத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறும். எதிர்வரும் 13 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை 14 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (2)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



முள்ளியவளை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலும்மயிலும் அரிகுகசிவம் என்பவர் அகில இலங்கை ரீதியிலான சமாதான நீதவானாக கடந்த 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவனும் ஓய்வு பெற்ற மக்கள் வங்கி முகாமையாளரும் ஆவார். இவர் ஒரு சிறந்த சமூக சேவையாளரும் ஆன்மீக தொண்டாற்றி வருபவருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## நினைவு அரங்கமும் அறிவோர் ஒன்றுகூடலும்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம், கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை பொது நூலகம் என்பன இணைந்து நடத்தும் தமிழ் வாழ்வாகிய தனிப்பெரும் சான்றோர்களான பேரறிஞர் அண்ணா தமிழ் தந்தை மறைமலை அடிகள், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆகியோரின் நினைவு அரங்கமும் அறிவோர் ஒன்றுகூடலும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி பொது நூலக மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் நா.சோதிநாதன் தலைமையில் நடைபெறும்.

அன்றையதினம் பருத்தித்துறை பெண்கள் உயர் நிலைப் பள்ளி ஆசிரியரும் அகில இலங்கை இளங்கோ தலைவருமான ப.ரமேஸ் "சிலம்பில் சிறப்பு" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

இதில் அனைத்து தமிழ் இலக்கிய ஆர்வலர்களையும் கலந்து சிறப்பித்து பயன்பெறுமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம், கரைச்சிப் பொது நூலக நிர்வாகத்தினர் ஆகியோர் இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர். (2-84)

## பூநகரி பொலிஸ் நிலைய நடமாடும் சேவையின் இறுதிநாள் நாளை

(பூநகரி)

பூநகரி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 20 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒருமாத கால நடமாடும் சேவையின் இறுதி நாள் நிகழ்வு நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை பூநகரி – யாழ். வீதியில் அமைந்துள்ள எஸ்.கே.ஆர். திருமண மண்டபத்தில் பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னாந்து பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

நடைபெற்ற வேலைத்திட்டத்தில் கலாசாரம், கல்வி, சுகாதாரம், சமயம், சிரமதானம், விளையாட்டு போன்ற விடயங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இறுதி நாளன்று பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கலும் பூநகரி பகுதி பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு மக்கள் வங்கியால் பாடசாலை உபகரணங்கள் கொண்ட பொதிகள் வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-84)




## தலைவர் தெரிவு

(பூநகரி)

இருபது கமக்கார அமைப்புக்களைக் கொண்டதாக இயங்கும் பூநகரி கமநல சேவை நிலையத்தின் புதிய தலைவர் தெரிவு கடந்த 29 ஆம் திகதி பூநகரி கமநல சேவை நிலைய மண்டபத்தில் பூநகரி கமநல வேலை அபிவிருத்தி அலுவலர் மு.இரகுநாதன் தலைமையில் நடைபெற்றது.

தலைவருக்காக இருவர் போட்டியிட்டதைத் தொடர்ந்து இரகசிய வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதில் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட கு.புவியரசன் 13 வாக்குகளையும் எதிர்த்துப் போட்டியிட்ட வ.சந்திரலோக இராசலிங்கம் 4 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

9 மேலதிக வாக்குகளால் புதிய தலைவராக கு.புவியரசன் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவரது பதவிக்காலம் மூன்று வருடங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

## புளியமுனைப் பகுதியில் வாழ்வுடைமை நிலங்களுக்கான வழி சீரற்றுள்ளது

### நேரில் சென்று பார்வையிட்டார் வடக்கு மாகாண சபை உறுப்பினர்



புளியமுனையில் காணப்படும் தமது வாழ்வுடைமை நிலங்களுக்கான வழியானது சீரற்று காணப்படுவதாக செம்மலை மக்கள் தெரிவித்ததையடுத்து உப உணவுப் பயிர்ச் செய்கைக்காக புளியமுனைக்குச் செல்வதற்கான குறித்த சீரற்ற வழியை வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

இது தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

செம்மலை மக்களுக்குரிய வாழ்வுடைமை நிலங்கள் புளியமுனைப்பகுதியில் உள்ளது. இந்நிலங்களில் உப உணவுப் பயிர்ச் செய்கையை அவர்கள் செய்து வருகின்றார்கள்.

இதற்குரிய பாதையாக நாயாற்று வழியாக சென்று முன்பு பயிர்ச்செய்கை செய்து வந்தார்கள். இது மிகவும் கூடியளவிலான தூரமாகும். செம்மலையிலிருந்தான மிகவும் குறுகிய வழியானது ஏற்கனவே தொடர்புடைய பணியாளர்களுக்கு காண்பிக்கப்பட்டு சிறிய தூரத்திற்குப்பாதையும் போடப்பட்டுள்ளது.

இருந்தும் மிகுதி வேலைகள் பணியாளர்கள் வந்து பார்வையிட்டும் இன்னும் சீராகவில்லை என மக்கள் முறையிடுகின்றார்கள்.

கூடியளவிலான மக்கள் நின்று பாதை சீராக்கலுக்கான வேலையை செய்து கொண்டிருந்தனர். அவர்களோடு உரையாடியும் குறித்த இடங்கள் மற்றும் சிறிய பாலம் அமைக்கும் இடத்தையும் பார்வையிட்டேன். உரியவர்களுடன் இது தொடர்பாக தொடர்பு கொண்டு இயன்றவற்றை செய்து தருவேன் என உறுதிமொழி வழங்கினார். (2)

# இரணைதீவில் 186 ஏக்கர் காணிகளை அடையாளப்படுத்த கடற்படையினர் இணக்கம்

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கடற்படையினர் வசமுள்ள மக்களின் பூர்வீக காணியான இரணைதீவு காணி விடுவிப்பின் முதற்கட்டமாக காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ள கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று பூநகரி பிரதான கடற்படை தளத்தில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன, மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் பாதுகாப்பு படையினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது முதலில் இரணைதீவு காணிகளை விடுவிக்க முடியாது என தெரிவித்துள்ளனர்.

அத்துடன்குறித்தகாணியை விடுவிப்பது தொடர்பில் பல்வேறு பாதுகாப்பு பிரச்சினைகள் உள்ளதாகவும் அவர்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் தெரிவித்தனர்.



குறித்த இரணைதீவு பகுதியானது இலங்கையின் தேசிய பாதுகாப்பிற்கு முக்கிய ஒருஇடமாக இருப்பதாகவும் போதைப்பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்தவும் ராடர் கண்காணிப்பு நிலையங்கள் இருப்பதனால் இரணைதீவினுடைய வடக்குப் பகுதி முழுமையாகத் தேவையென்றும் கடற்படையினர் குறிப்பிட்டிருந்தனர்.

இதேவேளை அந்தப்பகுதியில் மக்களை மீள்குடியேற்றும் போது கடற்கரையோரப் பகுதிகளில் உள்ள கடல்வாழ் உயிரினங்கள் அழிவடையும். அத்துடன், அங்கு குடிநீர்ப்பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்று இரணைதீவில் மக்கள் குடியேறுவதை தடுக்கும் வகையில் பல்வேறு காரணங்களை குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து 400 வருடங்களிற்கு மேலாக இந்தத் தீவிலே மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள், அவர்களது வாழ்வாதாரம் இங்கேதான் இருக்கின்றது.

குறித்த தீவு விடுவிக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் சிறிதரன் ஆகியோர் தெரிவித்ததையடுத்து, நீண்ட இழுபறிக்குப்பின்னர் இரணைதீவுப்பகுதியில் பொது மக்களுக்குச் சொந்தமான 186 ஏக்கர் காணிகளை அடையாளப்படுத்துவதற்கு கடற்படையினர் இணக்கம் தெரிவித்து இதற்கான குழுவொன்றினையும் நியமித்து அதன் மூலம் 186 ஏக்கர் காணிகளையும் அடையாளப்படுத்துவதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

இதேவேளை இப்பகுதி கடற்றொழிலாளர்கள் படகுகளை நிறுத்துவதற்கு 400 மீற்றர் கரையோரப்பகுதிகளையும் விடுவிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. சுமார் ஏறத்தாழ 1100 பரப்பளவைக்கொண்ட இரணைதீவில் 186 ஏக்கரை மட்டுமே விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்த வாரம் பூநகரிப் பிரதேச செயலாளர் மற்றும் இரணைமாதா நகரைச்சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் சென்று காணிகளை அடையாளப்படுத்துவதற்கு அனுமதித்ததாக கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

குறித்த இச்சந்திப்பில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சத்தியசீலன், பூநகரிப்பிரதேச செயலர் எஸ்.கிருஸ்ணேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# வவுனியா விவசாய பண்ணை கட்டடத் தொகுதி திறந்து வைப்பு



ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் நிதியின் கீழ் அமைக்கப்பட்ட வவுனியா விவசாய பண்ணை கட்டட தொகுதிநேற்றுவடக்குமாகாண சபை விவசாய அமைச்சர் க.சிவநேசனினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான பிரதிநிதி விடிசோ குபாவு, வவுனியா மாவட்ட மேல்திக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுக்கான பிரதிநிதியால் நெல் அறுவடை இயந்திரம், நெல் தரம் பிரிக்கும் இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களும் விவசாய திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது. (2-250)

# சிறு கைத்தொழில் அமைச்சினால் பயனாளிகளுக்கு கடல் அட்டைகள்



கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகத்தின் பள்ளிக்குடா கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க அங்கத்தவர் பயனாளிகளுக்கு நேற்றைய தினம் சிறு கைத்தொழில் அமைச்சினால் அட்டைப்பண்ணைக்கான கடல் அட்டைகள் சிறு கைத்தொழில் அமைச்சர் தயா கமகே மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு கடல் பண்ணையிலும் விடப்பட்டது. (2-312)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது குறித்து அதிகாரிகளுக்கு இடையில் கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில், சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகளுக்கும் மாவட்டத்தின் உயர் அதிகாரிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று, கடந்த 28ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய தலைமையில் நடைபெற்றது.

குறித்த விசேட கலந்துரையாடலில், அமைச்சர் றிசாத் பதியுதீன், சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகள், கைத்தொழில், வர்த்தகத்துறை அமைச்சின் அதிகாரிகள், மன்னார் மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் உட்பட ஏனைய திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, தலைமன்னார் தொடக்கம் முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மறிச்சுக்கட்டி வரையும், விடத்தல் தீவு தொடக்கம் மடு வரைக்கும் மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பார்வையிடுவதற்கு ஏற்ற வகையில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கும், குறிப்பாக மாவட்டத்தில் சுற்றுலாத்துறையினர் தங்குவதற்கு சுமார் 400 அறைகளை உள்ளடக்கிய திட்டங்களை மேற் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டது.

மேலும், சுற்றுலாத்துறையினரின் பொழுது போக்கு, பறவைகள் சரணாலயமாக வர்த்தமானி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ள இடங்களில், வெளிநாடுகளில் இருந்து வருகின்ற பறவைகளை சுற்றுலாத்துறையினர் பார்வையிடுவதற்கான அழகான பிரதேசங்கள் உள்ளன. இந்த நிலையில், குறித்த பிரதேசங்களில் பலவகையான அபிவிருத்திகளை சுற்றுலாத்துறையுடன் இணைந்து மேற்கொள்வதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (2)


# வீதி புனரமைக்கப்படுமா?

முல்லைத்தீவு - தேராங்கண்டல் புத்துவெட்டுவான் வீதி சட்டவிரோத செயற்பாடுகளால் மிக மோசமாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீதியானது புத்துவெட்டுவான், மருதன்குளம், பழையமுறிகண்டி, ஐயங்கன்குளம், தேராங்கண்டல் உள்ளிட்ட மிகவும் பழைமை வாய்ந்த விவசாயக் கிராமங்களை இணைக்கும் பிரதான வீதியாகவும் காணப்படுகின்றது.

அத்துடன், ஏ-9 வீதியின் கொக்காவில் சந்தியிலிருந்து மாங்குளம், வெள்ளாங்குளம் வீதியின் கொத்தம்பியாகுளம் சந்தியில் இணைக்கும் சுமார் 23 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியின் 10 கிலோமீற்றர் வீதி கடந்த 2013 ஆம் ஆண்டில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. (2)

# சட்ட விரோதமாக கடத்தப்பட்ட தீராந்திகள் கைப்பற்று



(பூநகரி)

பூநகரி காட்டுப் பிரதேசத்தில் இருந்து அண்மையில் சட்ட விரோதமாக கடத்தி வரப்பட்ட தீராந்திகளையும் வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பூநகரி பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கபில பண்டார தலைமையில் விரைந்த குழுவினர் மிகவும் சூட்சுமமான முறையில் கூடாரத்தோடு சேர்த்து தயாரிக்கப்பட்ட இரும்புப் பெட்டியிலே மரத் தீராந்திகள் வாகனத்தினுள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதேவேளை பூநகரி காட்டுப் பிரதேசத்தில் இருந்து பெரும் தொகையான மரங்கள் சட்ட விரோதமாக வெட்டப்பட்டு கடத்தப்பட்டு வருவதாகவும் கடந்த மாதத்தில் மட்டும் ஐந்து வாகனங்களில் கடத்தல்கள் முறியடிக்கப்பட்டதாகவும் பூநகரி பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-84)

# வவுனியாவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

(குருமன்காடு)

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப நபர் நேற்றுக் காலை 5.45 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட 2 கிலோகிராம் கேரளக் கஞ்சாவை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நபரொருவர் வைத்திருந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சியை சேர்ந்த 39 வயதுடைய குடும்பஸ்தராவார்.

விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அண்மைய நாட்களில் வவுனியா பேருந்து நிலையத்தில் தொடர்ச்சியாக கேரளக் கஞ்சா பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# புகழுக்கும் இறுதி உண்டோ...? பாராட்டுவோம் புகழ்வோம்

போற்றுவதும் தூற்றுவதும் புவி யில் அன்றாட நிகழ்ச்சியாகி விட் டது. போற்றினால் மகிழ்வர்: தூற்றினால் துன்புறுவர். பிறர் நம்மைப் போற்றவேண்டும் - புகழவேண்டும் - பாராட்டவேண் டும் என்ற ஏக்கம் இன்று எங்கும் பரந்துள்ள பெரு நோய். பிறரை புகழ்பாடுவது வேண்டுமானால் எல்லோருக்கும் பிடிக்காமல் இருக்கலாம் .ஆனால் புகழப் படுவது பூமியில் அனைவருக்கும் பிடித்த தொன்றே! புகழுக்கு மய ங்கா தோர் தான் இப்பூவுலகத்தில் இல்லையே! இளமைமுதல் முதுமை வரை இத்தகு புகழ் போதை மனித சமுதாயத்தைப் பீடித்துள்ளது.

ஒருவரது புகழும், சாதனையுமானது கதிரவனிடம் இருந்து வருகின்ற கதிரொளி போன்றது. அவர் பூதவுடலை விட்டு புகழுடம்பு எய்தினாலும், வேறொருவர் அவரின் சாதனைகளையும், சாமர்த்தியங்களையும் செய்து காட்டினாலும், அவரது தனித் தன்மை யையும், திறமையையும் தரணி யானது தன்நினைவில் வைத்துக் கொள்ளும். யாருடைய புகழையும் யாராலும் மறைக்கவோ, மறக்கப்படவோ, மறுக்கப்படவோ செய்ய இயலாது!

ஒருவன் இமாலய சாதனைகளை எட்டும் பொழுது தென்றலாய் தீண்டும் புகழ் காற்று, அவனை கர்வ கிரீடத்தை சூட்டிக் கொண்டு உச்சத்தில் இறுமாப்புடன் அமர்ந் திருக்கும் பொழுது சூறாவளியாய் சுழற்றி எட்டாத தூரத்திற்கு எட்டி உதைத்து விடும் வலிமை கொண்டது.

என் குழந்தை எத்துணை சுறு சுறுப்பாய் இந்தவேலையைச் செய்து முடித்துவிட்டது. "கெட்டிக்காரன்" - என்று தாய் தன் குழந்தையைப் பாராட்டுகிறாள். குழந்தையும் மகிழ்ச்சியில் திளைக்கிறது. சில காலம் சென்ற பின்னர் அக் குழ ந்தை பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்று விட்டால், தெருமுழுவதும் தன் பிள்ளையின் மதிப்பெண் புராணம் பாடி விட்டுத்தான் மறு காரியம் பார்க்கிறாள். பிள்ளையும் மிக்க மகிழ்ச்சி அடைகிறான்.

பாராட்டுவதால் உள்ளம் உற்சாகம் அடைகிறது,மனம் எழுச்சி பெறுகிறது. அங்கீகாரம் பெற்ற மைக்கான ஆனந்தம் தவழ்கிறது. பாராட்டுகிறவரைக் காட்டிலும் பாராட்டுப் பெற்றவர்தான் வேக மான வளர்ச்சியடைகின்றார் என்பது கண்கூடு.

ஒருவரை புகழ்ந்து போற்றி உற்சாகம் ஊட்டுவது, ஒரு மரத்திற்கு தண்ணீர் பாய்ச்சி அதற்கு ஊட்டமளிப்பது போன்றதாகும். நாம் ஒருவரை உள்ளத்திலிருந்து உண்மையாய் பாராட்டும் பொழுது காய்ந்தநிலையில் உள்ள சிறு செடியானது இயற்கை உரத்திலிருந்து இயல்பாக பலவகையான ஊட்டச் சத்துக்களை உறிஞ்சிக் கொண்டு சத்தான தரம் மிகுந்த சிறந்த காய்கனிகளை அள்ளித் தருவது போல சோர்ந்திருந்த படைப்பாளரும் பயனுள்ள படைப்புகளை படைப்பார். அதுவே செயற்கையாக வஞ்சப் புகழ்ச்சி செய்யப்படும் பொழுது, செயற்கை உரத்திலிருந்து திணிக்கப்படும் பொழுதும்,தண் ணீரை அளவுக்கு அதிகமாய் வாரி இறைக்கும் பொழுதும் பெருமை கொண்டு மரமானது தன் சிறப்பு தனை இழப்பது போன்று தன் படைப்பின் தகுதியையும் இழக்கின்றான்.

புகழ்ச்சி பற்றிய நம் கண்டேணாட்டமானது, வானில் தோன்றும் வெண்மதி அழகாய் காட்சி தருவதை போன்றது. அதாவது உள்ளத்தில் உற்சாகத்தையும், உவகையையும் ஏற்படுத்தும் பெருமை கொண்டது. புகழானது நிலா போன்று நிலையானதன்மையுடன் நில வொளியைநில்லாது நிறைவாக தந்தாலும், தேவையான நேரத்திற்கு ஆற்றலை அனுதினமும் பெருக்கிக் கொள்பவனே வானில் வளர்பிறை வெண்மதியைக் காண் பது போல் வாழ்வில் புகழ் வெளிச் சம்பெற்று பௌர்ணமியாய் பெற்றுக் கொள்கிறான். செயல் திறனை செம்மையாய் செயற்படுத்தாதவன் தேய்பிறை வெண்மதியைக் காண்பதுபோல் தேய்ந்து அமாவாசை யாய் வாழ்வில் புகழ் வெளிச்சம் குன்றப்பட காணாமல் போகும் நிலையற்ற தன்மைக்கு தள்ளப்படுகிறான்.

ஒருவர்நம்மைப்புகழும்பொழுது கும்மாளத்துடன் புகழேணியில் ஏறும் மனது. நம் குறைகளை சுட்டிக்காட்டும் பொழுது தாழ்ந்து இறங்கி வந்து தவறான படிக்கட்டுக்களான படைப்புகளை திருத்திக் கொள்ள வேண்டும். புகழ்ச்சியின் மீது இச்சைகொண்டும், இகழ்ச்சியின் மீதுஅச்சம் கொண்டும் இருத் தல் கூடாது. பாரின் பாராட்டுக்களால் திளைக்கும் பொழுது, படைப்பாளரின் படைப்புக்கள் புத்துணர்வு பெறுவதுடன், தகுதிபெற்றதாகவும் தரம் உயரத்தப்படுகின்றன.

புகழின் புகலிடம் யாதெனில், நிகழ்கால வாழ்க்கை நிலையற்ற தன்மை கொண்டது. அத்தகைய வாழ்க்கையில், அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியில் பதினாறு செல்வங்களுள் திருத்தமாக "தாழாத கீர்த்தியும்...." என்று குறிப்பிட்டு புகழின் முக்கியத்துவத்தை மொழி கின்றார். வெற்றியையும், தோல்வியையும்சமமாக எடுத்துக் கொள்பவனிடமே புகழ் புகலிடம் கொள்கின்றது.

பொதுவாக மனித மகிழ்ச்சிக்குச் சமநிலையும் சஞ்சலமற்ற போக்கும் இன்றியமையாததவை. சமநிலை என்றால், வைதலையும் வாழ்த்துதலையும் சமமாகக் கருதுவது. சமநிலை இருக்கும் இதயத்தில் சஞ்சலம் சாய்ந்து போகும். சமத்துவ எண்ணம் தளிர்விடும். சான்றோர் கூட்டத்தைச் சார்ந்து ஒருவர் வாழ்ந்தால் சமநிலை இயல்பாகவரும்.



நாம் வாழ்வது தனித்தீவென்று. மனிதர்கள் அனைவரும் அன்புச் சங்கிலியால் பிணைக்கப் பட்டிருக்கிறார்கள். இதில் ஒவ்வொருவரும் சிறுசிறுவளையமாகப் பரிண மிக்கின்றார்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயர்நிலை ஒருமைப்பாடு உள்ளத்தில் பதிய வேண்டும். இதனால் தன்னலம் தகர்க்கப்படுகிறது. பொதுநலம் பூக்கிறது. மனித உறவு மாட்சிமை பெறுகிறது. மனிதன் புனிதன் ஆகிறான். நாம் பிறரைப் புகழும் போது, புகழப்பட்டவர் நம் எல்லைக்குள் வந்துவிடுகிறார். இருவரின் இதய ங்களும் கலக்கின்றன. இன்பம் பூக்கிறது. தனிப்பட்ட அக்கறை தோன்றுகிறது. புகழும் போது சிக்கனம் கூடாது. தாராளமாகப் புகழவேண்டும். கள்ளம் கபட மின்றிப் போற்றல் வேண்டும். ஒருவரின் அறி வையும் ஆற்ற லையும் பலர் முன்னிலையில் புகழ்வதே பொருத்தமானது ஆகும்.

எப்போதும் முகமலர்ச்சியுடனும் வளமாகவும் வாழ்வியல் நடத்தவேண்டும் என்றால் மனத்தில் நல்ல எண்ணங்களை - மகிழ்ச்சியான கருத்துகளைத் தவழ விடுங்கள். மனிதன் என்ன நினைக்கிறானோ, அப்படியே ஆகிறான் என்பது ஆன்றோர் மொழி.

ஆனாலும் "உன்னை அளவின்றிப் புகழ்கின்றவன் ஏற்கனவே உன்னைஏமாற்றி விட்டான், அல்லது ஏமாற்ற விரும்புகிறான்"-என்பது ஹங்கேரிய பழ மொழி. மனத்தில் ஏதேனும் உள்நோக்கம் கொண்டு, புகழைப் பொருத்தமில்லா இடத்தில் உளறிக் கொட்டுபவனிடத்தில் நாம் சற்று விழிப்புடன் இருத்தல் வேண்டும் என்ற எச்சரிக்கையை இப் பழ மொழி நமக்குப் போதிக்கின்றது.

கம்பர்,வள்ளுவரின் கருத்துகளும்,வார்த்தைகளும் இவற்றை தெளிவுற விளக்குகின்றன.

இன்று உளார் நாளை மாள்வர் புகழுக்கும் இறுதி உண்டோ? என்ற பாடல் வரியில் இராமன் வெற்றிபெற்று சரித்திரத்தில் அவர் பெயர் இடம்பெற்றாலும் அவருக்கு ஈடுகொடுத்து சக்தியை வெளிப் படுத்தியவரின் பெயரும் இடம் பிடிக்கும். நிலையற்ற வாழ்க்கையில் நிலையானது புகழே என்று நினைவு கூருகிறார் கம்பர்.

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாக்குப்படி பூமியில் பிறந்தவர்கள் யாவரும் புகழ்பெறும்படி தங்கள் வாழ்க்கையில் தேர்ந்த இடங்களில் திறமைகளை திறம்பட தெரிவிப்பது போன்று வாழவேண்டும். தங்கள் திறனை தரணியறியச் செய்யாது, புகழ் பெறாது வாழ்பவர்கள் இவ் வுலகத்தில் தோன்றியதற்கு தோன்றாமல் இருத்தலே நல்லது என்று ரைக்கிறார்.

கிரீஸ் நாட்டில் உள்ள பல்வேறு சிலைகளை மாமன்னர் அலெக் ஸாண்டர்,வேற்றுநாட்டுப் பிரமுகர்களுக்கு அறிமுகம் செய்து கொண்டிருந்தார். பல்வேறு வீரர்கள், அறிஞர்கள், மன்னர்களின் சிலைகள்தான் அவை. பிரமுகர்கள் சிலைகளைக் கண்ணுற்றுப் பெரிதும் வியந்து போற்றினர். அவர்களுள்ஒருவர், அலெக்ஸாண்டரைப் பார்த்து," இவற்றுள் உங்கள் சிலைஏன் இல்லை?" என்று கேட்டார். அதற்கு அலெ க்ஸாண்டர், "என் சிலை இங்கு இல்லை என்று உணர்ந்து கேட்ப தையே பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். என் சிலையை யாரும் அறிமுகம்செய்து வைக்காமலேயே பார்த்தவுடன் புரிந்து கொள்ளும் உணர்வை நான் உண்டாக்கு வேன். இன்னும் என் தரம் உயர்ந்தால் இயல்பா கவே அந்நிலை அடை வேன்" என்றார். குறிப்பிட்ட துறையில் புகழொடு தோன்றுதல் என்பது இதுதான்.

உள்ளுவது எல்லாம் உயர் வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து

என்ற குறளில் நாம் நினைப்பவை எல்லாம் உயர்வாய் உச்சத்தை தொடுவதாக அமைந்திருக்க வேண்டும். அதற்கான பயிற்சியையும், முயற்சியையும் மிகுந்த சிரத்தையுடன் செய்தும், விதியின் வசத்தால் 'கைகூடாமல்' போனாலும் கைகூடியதற்கு ஒப்பாகக் கருதப்படும் என்கிறார் வள்ளுவர். புகழின் பெருமையை அறிந்ததனாலேயே திருவள்ளுவர் புகழுக்கென்று ஓர் அதிகாரத்துக்கு பத்து குறள் கள் விகிதம் படைத்துள்ளார்.

எந்த துறையில் கால்பதித்தாலும் முழு ஈடுபாட்டுடனும், தங்கள் திறமையை வளர்த்துக் கொண்டு பட்டை தீட்டி வைரமாய் மின்னி ஒளிவீசவேண்டும். இம் மண்ணில்புகழுடலுக்கு இறுதி உண்டே தவிர புகழ் உடலுக்கு இறுதியில்லை என்பது நிதர்சனம். ஒருவர் இறந்த பின்னரும் நின்று நிலவக் கூடியது புகழ் ஒன்றே. புகழ் பெறா உடம்பு பூமிக்குப் பாரமாகும். எனவே புகழ் பெற வாழ்வோம் வாழ்விப்போம்!

காலிங்கராசா
ஹரிச்சந்திரா
தொழில்நுட்ப அலுவலர்,
மீன்பிடியியல்
விஞ்ஞானத்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 192

மனித அபிவிருத்திச் சுட்டியை அறிமுகப்படுத்திய நிறுவனம் எது?

**புதிர் 192 இற்கான விடைகளை11.09.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

கலாநிதி.(செல்வி) ஷிவநர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.**
**இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.**

**புதிர் 191க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே. இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 191க்கான கேள்வியும் விடையும்:**

தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பின் (SAARC) நிரந்தர செயலகம் எங்கே அமைந்துள்ளது?

காத்மண்டு

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 192**

சரியான விடை:.......................................................

முழுப்பெயர்:.......................................................

முகவரி:.......................................................

தொ.பே. இல:.......................................................

கையொப்பம்:.......................................................

## உலக வங்கி நிதியுதவியுடன் வேலணையில்

# கடலட்டை வளர்ப்பதற்கு 100 பயனாளிகள் தெரிவு

### 10 பேருக்கு நேற்று வழங்கல்





ஆரம்ப கைத்தொழில் அமைச்சின் விவசாய நவீன மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் செயற்கை முறையிலான கடலட்டை வளர்க்கும் புய னாளிகளுக்கு கடலட்டை வழங்கும் நிகழ்வு நேற் றைய தினம் யாழ்ப்பாணம் வேலணை பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றது.

உலக வங்கியின் நிதி உதவியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் அப் பகுதியை சேர்ந்த 100 பயனா ளிகள் தெரிவு செய்யப்பட்டு ள்ளனர்.

இதில் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 10 பய னாளிகளுக்கு சுமார் 2 லட் சம் பெறுமதியான கடலட் டைகள் ஆரம்ப கைத்தொ ழில் அமைச்சர் தயா கமகே யால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறுவர் விவகார இராஜாங்க அமை ச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு மதி சுகுணரதி தெய்வேந் திரம், யாழ்.மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளர் திருமதி மோக னேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# CITES மாநாடு தொடர்பில் ஆரம்பக் கலந்துரையாடல்



அச்சுறுத்தலுக்குள்ளாகி யிருக்கும் வன ஜீவராசி களை சட்டவிரோதமாக விற்பனை செய்வது தொட ர்பான மாநாட்டின் (CITES) 18வது கூட்டத்தொடர் 2019 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ளதுடன், அதன் ஏற்பாடுகள் தொடர்பான கல ந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மையில் நேற்று முற்ப கல் ஜனாதிபதி அலுவ லகத்தில் நடைபெற் றது.

2019 ஆம் ஆண்டு மே மாதம் 187 க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 4,500 பேரின் பங்குபற்றுதலுடன் இம் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது.

வன ஜீவராசிகள் தொடர்பாக செயற்றிற னாக செயற் பட்டுவரும் நாடு என்ற வகை யில் இது இலங்கைக்கு கிடை த்த வெற்றியாகும்.

மாநாட்டை வெற்றி கரமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து இங்கு கல ந்துரையாடப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு பொறுப்புக்கள் வழங்கப்பட டன. இந்த மாநாட்டின் ஒருங்கிணைப்பு நடவடிக் கைகளுக்காக ஜனாதிபதியி னால் ஜனாதிபதியின் மேல திக செயலாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

அமைச்சர்களான காமினி ஜயவிக்ரம பெரேரா, ஜோன் அமரதுங்க, நிமால் சிறிபால டி சில்வா, எஸ்.பி. நாவின்ன, திலக் மாரப்பன, ஹரீன் பெர்னாண்டோ, பிரதி அமை ச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ ஆகியோர் இக்கலந்துரையா டலில் பங்குபற்றினர். (இ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தொண்டைமானாறு
சந்நிதியான் ஆச்சிரம
**மோகனதாஸ் சுவாமிகளுக்கு**
தமிழ்நாடு மத்திய
பல்கலைக்கழகம்,
கௌரவ "டாக்டர்" பட்டம்
வழங்குவதையிட்டு
மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.
சுவாமிகள் மேலும் பல பட்டங்களைப்
பெற்று ஆன்மீகப் பணிகளை மேற்
கொள்ள எல்லாம் வல்ல
சந்நிதியானைப்
பிரார்த்திக்கின்றோம்.
**அன்பே சிவம்!**

மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி. (285) நிர்வாகம்.


# பாடசாலை மாணவருக்கு இலவசமாக இறுவெட்டு

### கல்வியமைச்சர் காரியவசம் தகவல்

எதிர்வரும் வருடத்தில் பாடசாலை மாணவர்களு க்கு வழங்கப்படும் இலவச பாடப்புத்தகத்துடன் குறித்த பாடகத்துடன் தொடர்பான இறுவெட்டுக்களை வழங்குவ தற்கு நடவடிக்கை மேற்கொ ள்வதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வி முறைமையை நவீனமுறைப்படுத்தும் திட் டத்திலேயே இந்த நடவடி க்கை மேற்கொள்ளப்படவிரு ப்புதாக அமைச்சர் தெரிவித் துள்ளார்.



கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊட கவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரி வித்துள்ளார். (இ-7)


## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டறவுச் சங்கம்(வ-து)

**பதிவு இல - J/1594** **பதிவுத் திகதி -11.03.1972**

**பதவி வெற்றிடம்**

**01. பதவி - விற்பனை உதவியாளர் (01)**

குறியீட்டு இல. - 308/17 (13/2015 இன்படி)
சம்பள அளவுத்திட்டம் - 12800-100X10- 110x10-14900
வயதெல்லை - 21-45 வரை
பால் -ஆண்/ பெண்

தகைமைகள்:-

அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்

அல்லது

ஆ. 08 ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03). வருடங்களுக்கு குறையாத அனுபவம்

குறிப்பு:

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணை யினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 15.09.2017**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகிய வற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விற்பனை உத வியாளர் (308/17) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு 15.09. 2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்,**
**டச்சு வீதி, சாவகச்சேரி.** (சி-9473) **தலைவர்** **01.09.2017**



# கல்யாணமாலை

## சர்வதேச் திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:தனியார் தொழில்<br>தொ.இ: B/6895 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 60சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'5".<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4178 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 34<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDAலண்டன் NOT PR<br>தொ.இ: B/6896 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 46<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4183 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/6897 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 55<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்Diploma/முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4194 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 75<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma/ தனியார் தொழில்<br>தொ.இ: B/7179 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: G/4199 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சசிகலா குடும்பம் பற்றி ஜெயலலிதாவின் உரை

## அமைச்சர் உதயகுமார் வெளியிட்ட சி.டியால் பரபரப்பு



சசிகலா குடும்பத்தை பற்றி மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா பேசிய சி.டியை வருவாய்த்துறை அமைச்சர் உதயகுமார் வெளியிட்டுள்ளார்.

வருவாய்த்துறை அமைச்சர் உதயகுமார் சென்னையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது,

அ.தி.மு.கவின் கடைநிலை தொண்டன் என்ற அடிப்படையில் 2 சி.டிக்களை வெளியிட்டுள்ளேன். ஒன்று 30-12-2011 அன்று நடந்த கட்சிக் கூட்டத்தில் மறைந்த முதல்வர் அம்மா உரையாற்றிய சி.டியாகும்.

இதில் கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் (சசிகலா குடும்பம்) பற்றி தெளிவாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர்களுடன் எந்தத்தொடர்பும் வைத்துக்கொள்ள வேண்டாம். அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரையெல்லாம் தொடர்பு கொள்ளக்கூடாது என்ற பேச்சு விபரங்கள் அதில் உள்ளன.

மற்றொரு சி.டி. 20-11-2013 அன்று எடப்பாடி பழனிச்சாமி இல்ல திருமண விழாவில் அம்மா பேசிய பேச்சு விபரங்கள் அடங்கியுள்ளது.

1974ஆம் ஆண்டில் கட்சியின் கிளைச் செயலாளராக தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பணியாற்றியது முதல் அவர் கட்சிக்கு எப்படி உறுதுணையாக இருந்தார். விசுவாசமாக இருந்தார். படிப்படியாக அவர் பல்வேறு பொறுப்புகளை வகித்தது போன்ற விபரங்கள் குறித்து பேசியுள்ளார். அது வாக்குமூலமாக, மதிப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவை சிலரின் சுயநலத்துக்காக பலி கொடுக்கக்கூடாது என்பதற்காகவும் அ.தி.மு.க்வின் அடிப்படை தொண்டர்கள் இதனை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இதனை வெளியிடுகிறேன்.

இப்போது கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்ற நினைக்கும் குடும்பத்தின் நிலை என்ன? அவர்களை அம்மா எந்த நிலையில் வைத்திருந்தார்கள் என்பது தெரியவரும்.

அ.தி.மு.கவில் இல்லாத தங்களை இருப்பதாக காட்டிக்கொண்டு தொண்டர்களை குழப்புகிறார்கள். பதவி ஆசையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

புரட்சித்தலைவரால், அம்மாவால் நியமிக்கப்பட்ட நிர்வாகிகளை நீக்குவதாக அறிக்கை விடுகிறார்கள். தமிழக மக்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவரின் சுய நலத்துக்காக இது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

அம்மா வகுத்துக் கொடுத்த பாதையில் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி செய்கிறார். இந்த அரசு சேவையாற்றும் நேரம் இது. இந்த நேரத்தில் தேவையில்லாமல் பதவி ஆசையில் குழப்பம் ஏற்படுத்துகிறார்கள். தனி நபரை முன்னிலைப் படுத்துகிறார்கள்.

இதனை பார்த்து மக்கள் முகம் சுழிக்கிறார்கள். அருவருக்கத்தக்க வகையில் இந் நடவடிக்கை இருக்கிறது.

அம்மாவின் ஆசியுடன் ஆட்சி செய்து வரும் எடப்பாடி பழனிச்சாமி அரசை நடுநிலையாளர்கள் பாராட்டுகிறார்கள்.

இப்போது எதிர்ப்பு தெரிவித்து வரும் 21 எம்.எல்.ஏக்களும் இந்த அரசை கவிழ விடமாட்டார்கள். சுய நலவாதிகள் அமைதியாக இருந்தால் குழப்பம் ஏற்படாது.

அம்மா மறைந்த போது அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதால் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. அதன் பின்னர் இப்போது தெளிவாக இருக்கிறோம்.

மாநில பிரச்சினையில் மத்திய அரசு தலையிடுவதாக ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை கூறுவது முறையல்ல.

தமிழக மக்களின் நலனுக்காக மத்திய அரசுடன் மாநில அரசு சுமுக உறவு வைத்துள்ளது.

இந்த அரசு மீது ஊழல் குற்றச்சாட்டு கூறிய ஓ.பன்னீர்செல்வம் அணியை ஒரே குடும்பம் என்ற வகையில் மன்னித்து விட்டோம். செங்கோட்டையனுக்கு சசிகலா அமைச்சர் பதவி கொடுத்ததில் தவறு இல்லை. அவர் கட்சியில் மூத்த நிர்வாகி என அவர் மேலும் தெரிவித்தார். (8)

# இடிந்து விழுந்தது 3 மாடி கட்டடம்



(மும்பை)

மும்பையில் சில தினங்களாக பெய்து வரும் கனமழையால் மூன்று மாடி குடியிருப்பு இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 12 பேர் காயமடைந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மராட்டிய மாநிலத்தில் மும்பை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக மும்பையில் ஒரே நாளில் 30 செ.மீ. அளவுக்கு மழை கொட்டித் தீர்த்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியது. வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் மும்பை நகரின் பெண்டி பசார் பகுதியில் உள்ள மூன்று மாடி குடியிருப்பு கட்டிடம் நேற்று அதிகாலை இடிந்து விழுந்தது.

இதுகுறித்து மாநகராட்சி பேரிடர் மேலாண்மை குழுவினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பேரிடர் மேலாண்மை குழுவினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

கட்டட இடிபாடுகளில் 30 இற்கும் மேற்பட்டோர் சிக்கி இருப்பதாக கூறப்பட்ட நிலையில், 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 12 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மேலாண்மை குழு மற்றும் தீயணைப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (8)

# ரயில்வே ஊழியர்கள் 13 பேர் பணிநீக்கம்



முசாபர்நகர் அருகே எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு கவிழ்ந்ததில் 23 பயணிகள் பலியானது தொடர்பாக ரயில்வே ஊழியர்கள் 13 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

உத்தரபிரதேச மாநிலம் முசாபர்நகர் அருகே கடாலி என்ற இடத்தில் கடந்த 19 ஆம் திகதி கலிங்கா உத்கல் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு கவிழ்ந்ததில் 23 பயணிகள் பலி ஆனார்கள். இந்த விபத்தை தொடர்ந்து ஏற்கனவே 4 ரயில்வே அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 3 அதிகாரிகள் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளனர்.

இந் நிலையில், இவ் விபத்து தொடர்பாக ரயில்வே ஊழியர்கள் 13 பேர் தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இவர்களில் 11 பேர் கேங்க்மேன் ஆவார்கள். ஒருவர் இளநிலை பொறியாளர் ஆவார்.

பணியில் கவனக்குறைவாக இருந்ததால் இவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டு இருப்பதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. ரயில்வே விதிமுறையின் கீழ், இவர்கள் தங்கள் தரப்பிலான கருத்துகளை 45 நாட்களுக்குள் தெரிவிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (3-8)

## பாரதச் செய்தி



டில்லியில் தமிழக விவசாயிகளின் போராட்டம் நேற்று முன்தினம் 46ஆவது நாளாக நீடித்தது. இதையொட்டி விவசாயிகள் தொழுநோயாளிகள் போல வேடமிட்டு ஜந்தர் மந்தர் வீதியில் ஊர்வலமாக சென்றனர்.

# ராம்நாத் கோவிந்துடன் எதிர்க்கட்சியினர் சந்திப்பு




(டில்லி)

டில்லியில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை எதிர்க்கட்சியினர் சந்தித்துள்ளனர். குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெறும் சந்திப்பில் 3 கட்சித் தலைவர்கள் உள்ளனர். எம்.பிக்கள் கனிமொழி, ஆர்.எஸ்.பாரதி, டி.ராஜா உள்ளிட்டோர் குடியரசுத் தலைவரை சந்திக்கின்றனர்.

இவர்களுடன் டி.கே.எஸ். இளங்கோவன், திருச்சி சிவா, சீதாராம் பெய்சூரி, ஆனந்த் சர்மா உள்ளிட்டோரும் உடன் சென்றுள்ளனர்.

இச்சந்திப்பின் போது எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான தமிழக அரசு மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தக் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# பஞ்சாப் எல்லைப்பகுதியில் போதைப்பொருள் பறிமுதல்

பஞ்சாப் மாநிலத்தின் பாகிஸ்தான் எல்லைப்பகுதி யில் சுமார் 53 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருளை எல்லைப் பாதுகாப்பு படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்திய-பாகிஸ்தான் எல்லையான பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் அருகேயுள்ள ஷம்ஸ்கி என்ற இடத்தில் பாதுகாப்பு பணியில் எல்லை பாதுகாப்பு படையினர் ஈடுபட்டிருந்தனர். அப்போது எல்லைப் பகுதியில் கடத்தல் கும்பல் நடமாட்டம் இருப்பதை கண்ட பாதுகாப்பு படையினர், அப்பகுதியை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். அதற்கு கடத்தல் கும்பலும் பாது காப்பு படையினர்மீது திருப்பிசுட்டனர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. எல்லை பாதுகாப்பு படை வீரர்களின் தாக்குதலை சமாளிக்க முடியாத கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் பாகிஸ்தான் பகுதிக்குள் புகுந்து தப்பி விட்டனர். பின்னர் பாதுகாப்பு படையினர் அப்பகுதிக்கு விரைந்து சென்று சோதனை நடத்தினார்கள். அப்போது அந்த இடத்தில் 10 பொதிகள் கிடந்தன. அதை அவர்கள் திறந்து பார்த்த போது ஹெரோயின் என்ற போதைப்பொருள் இருந்ததை கண்டுபிடித்து கைப்பற்றினர்.

மொத்தமாக 10.740 கிலோ அளவிலான போதைப் பொருளை பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்தனர். இவற்றின் சர்வதேச மதிப்பு ரூ.53 கோடியாகும். (8)

# வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை ஐ.நா. பாதுகாப்பு சபை கடும் கண்டனம்



(ஐ.நா)

ஜப்பான் தீவை கடந்து செல்லும் வகையில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதற்கு ஐ.நா பாதுகாப்பு சபை கண்டனம் தெரிவித்துள்ளது. தென்கொரியா, ஜப்பான் அண்டை நாடுகள் மற்றும் அமெரிக்காவை அச்சுறுத்தும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

நீண்டதூரம் சென்று தாக்கும் ஏவுகணையை வடகொரியா நேற்று சோதனை செய்தது. இது குறித்து ஐ.நா பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் உடனடியாக ஆலோசிக்க வேண்டும் என ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் வலியுறுத்தின.


இதையடுத்து 15 நாடுகளின் உறுப்பினர்கள் அடங்கிய ஐ.நா. பாதுகாப்பு சபை அவசரக் கூட்டம் நேற்று முன்தினம் கூட்டப்பட்டது.

வடகொரியாவுக்கு கண்டனம் தெரிவிக்கும் அறிக்கையில் கையெழுத்திட சீனாவும், ரஷ்யாவும் சம்மதித்தன. அதன்பின் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில் வடகொரியாவின் சமீபத்திய ஏவுகணை சோதனை, கொரிய தீபகற்ப பகுதியில் மட்டும் அல்ல, ஐ.நா. உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் அச்சுறுத்தலாக உள்ளன.

ஜப்பானை கடந்து ஏவுகணை சோதனை நடத்தியது ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு கவலை அளிக்கிறது. அணு ஆயுத திட்டங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் வடகொரியா உடனே நிறுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ் ஏவுகணைச் சோதனை குறித்து வடகொரிய ஜனாதிபதி "தொலைதூர ஏவுகணை சோதனை மிகுந்த திருப்தியை அளித்துள்ளது. இன்னும் அதிக ஏவுகணை சோதனைகள் மேற்கொள்ளப்படும்" என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# ஹார்வே புயலில் 30 பேர் பலி!



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை கடுமையாக தாக்கிய ஹார்வே புயலுக்கு இதுவரை இந்திய மாணவர் உட்பட 30 பேர் பலியாகி உள்ளனர். குற்றச்சம்பவங்களை தடுப்பதற்காக இரவு நேர ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பல இடங்கள் தண்ணீரால் சூழப்பட்டு தனித்து விடப்பட்டுள்ளதால் குற்றச் சம்பவங்களுக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இதனை தவிர்க்கும் வகையில் ஹூஸ்டன் மேயர் சில்வெஸ்டர் இரவு நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2005-ம் ஆண்டு தாக்கிய கத்ரினா புயலால் ஏற்பட்ட ஆழமான வடுக்களை தாங்கியுள்ள லூசியானாவில் 12 ஆண்டுகளுக்கு பின் ஹார்வே புயல் மீண்டும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மணிக்கு 72 கி.மீ. வேகத்தில் காற்று வீசுகிறது. 15 முதல் 25 செ.மீ. அளவிற்கு மழை பெய்து வருகிறது.

இதனிடையே டெக்சாஸ்-லூசியானா எல்லைப்பகுதியில் இரண்டாவது முறையாக நேற்று முன்தினம் மீண்டும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. ஹார்வே புயலின் தாக்கம் நேற்று முன்தினம் நள்ளிரவு வலுவிழக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஹூஸ்டன் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளம் மற்றும் புயலால் ஏற்பட்ட பிற பாதிப்புகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஹார்வே புயல் பாதிப்பால் ஏற்பட்ட அசம்பாவிதச் சம்பவங்களில் இது வரை இந்திய மாணவர் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலியானோர் எண்ணிக்கை மேலும் உயர வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகின்றது. (8)

# பாகிஸ்தானுக்கு நிபந்தனையுடன் நிதியுதவி

## உறவில் விரிசல் ஏற்படாமல் தடுத்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு நிபந்தனையுடன் 255 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெற்காசியாவுக்கான புதிய கொள்கையை சமீபத்தில் வெளியிட்டார். அதில், ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை நடத்தி வரும் தலிபான், ஹக்கானி உள்ளிட்ட பெருவாரியான தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் துணை போவதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அமெரிக்காவின் புதிய தெற்காசிய கொள்கையை ஏற்கப்போவதில்லை என பாகிஸ்தான் அறிவித்தது. 'அமெரிக்காவிடமிருந்து நிதியையோ, ஆயுதங்களையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்று பாகிஸ்தான் ராணுவ தளபதி ஜாவீத் பஜ்வா கூறியிருந்தார்.

அதேசமயம், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையை தற்காலிகமாக நிறுத்தும் வகையில் இரு நாடுகளுக்கு இடையே தலைவர்களின் பயணமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், பாகிஸ்தானுக்கு நிபந்தனைகளுடன் கூடிய நிதியுதவியை வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்காவுக்கு 255 மில்லியன் டொலர் அளவுக்கு ராணுவ நிதியுதவி வழங்குவதாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், ஆப்கானிஸ்தானில் தாக்குதல் நடத்தி வரும் உள்நாட்டு தீவிரவாத குழுக்கள் மீதான நடவடிக்கையை தீவிரப்படுத்தினால் மட்டுமே இந்த உதவியை பாகிஸ்தான் பெற முடியும் என கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்படுவதற்கான அறிகுறிகள் ஆரம்பமான நிலையில், அமெரிக்கா இந்த புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (8)




# ஆப்கானில் அதிகரிக்கும் அமெ. இராணுவத்தினர்



()

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ராணுவத்தினரின் எண்ணிக்கை 8400ல் இருந்து 11 ஆயிரமாக அதிகரித்துள்ளது என அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் 2001-ம் ஆண்டு இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்டதை தொடர்ந்து, அல்கொய்தா மற்றும் தலிபான் பயங்கரவாதிகளை வேட்டையாடுவதற்காக ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் களமிறங்கின.

நீண்ட காலமாக நடந்து வரும் இப் போரில் பயங்கரவாதிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டதை தொடர்ந்து, உள்நாட்டு பாதுகாப்பு பொறுப்பை அந்நாட்டு அரசு படைகளிடம் அமெரிக்க அரசு ஒப்படைத்தது. அதன் பின்னர் அங்கு முகாமிட்டிருந்த அமெரிக்க வீரர்கள் படிப்படியாக தங்கள் நாட்டுக்கு திரும்பினர்.

இந்நிலையில், அங்கு சுமார் 8,400 அமெரிக்க வீரர்கள் மட்டுமே உள்ளனர் என கூறப்பட்டிருந்தது. தொடர்ந்து தீவிரவாத தாக்குதல் நடந்துவருவதால் அங்கு அமெரிக்க படையினரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தர விட்டிருந்தார்.

அதைத்தொடர்ந்து, அங்குள்ள ராணுவ வீரர்களின் எண்ணிக்கையை அமெரிக்கா அதிகரித்துள்ளது. தற்போது ஆப்கானில் 11 ஆயிரம் அமெரிக்க ராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக ஜெனரல் கென்னத் மெக்கென்சி தெரிவித்துள்ளார். இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு இருந்த வீரர்கள் எண்ணிக்கையை விட அதிகம் எனவும் அவர் தெரிவித்தார். (3-8)

# நடுவானில் இடைமறித்து தாக்கி அழிக்கும் அமெரிக்காவின் ஏவுகணைச் சோதனை வெற்றி

(வோஷிங்டன்)

வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் அமெரிக்கா எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் சோதனையை நேற்று முன்தினம் நடத்தியது.

தனது எதிரி நாடான தென் கொரியாவுக்கு அமெரிக்கா துணையாக இருப்பதால் வடகொரியா அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்டு வருகிறது. அமெரிக்காவை மிரட்டும் வகையில் ஏவுகணை மற்றும் அணுகுண்டு சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.



எனவே, வடகொரியாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா பல்வேறு பொருளாதார தடைகளை விதித்தது. இதனால் கோபம் அடைந்த வடகொரியா ஜப்பான் அருகே உள்ள அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் தீவை தாக்கப் போவதாக அறிவித்தது. இதனால் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. பின்னர் இத்திட்டத்தில் இருந்து வடகொரியா பின் வாங்கியது.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வடகொரியா பசுபிக் கடலை நோக்கி புதிய ஏவுகணை ஒன்றை வீசியது. ஜப்பான் நிலப்பரப்பு வழியாக இந்த ஏவுகணை சென்றது.

குவாம் தீவை தாக்கும் முன்னோட்டத்துக்காக இச் சோதனை நடத்தப்பட்டதாக வட கொரியா அறிவித்துள்ளது. மேலும் இதுபோன்ற பல சோதனைகளை நடத்த போவதாகவும் வட கொரியா அறிவித்துள்ளது.

இதனால் வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் அமெரிக்கா எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் சோதனையை நேற்று முன்தினம் நடத்தியது.

ஹவாய் தீவில் இருந்து இச்சோதனை நடத்தப்பட்டது. ஹவாய் தீவு அருகே நிறுத்தப்பட்டு இருந்த யூ.எஸ்.எஸ். ஜான்பால் ஜோஸ் கப்பலில் இருந்து ஏவுகணையை அனுப்பினார்கள்.

அதே நேரத்தில் மற்றொரு ஏவுகணை தரை பகுதியில் இருந்து அனுப்பப்பட்டது.

தரைப் பகுதியில் இருந்து வந்த ஏவுகணையை கப்பலில் இருந்து சென்ற எஸ்.எம்-6 ஏவுகணை நடுவானில் தாக்கி அழித்தது.

வட கொரியா ஏவுகணைகளை அனுப்பினால் அதை நடுவானில் இடை மறித்து தாக்கி அழிக்கும் வகையில் இந்த சோதனை நடத்தப்பட்டது. (8)

# தூய்மையான அரசியல் இயக்கமே இன்று தேவை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லாட்சியிலிருந்து யார் வேண்டுமானாலும் விலகிச் செல்லலாம். யார் வேண்டுமானாலும் இணைந்து கொள்ள முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய கணக்காய்வு சட்டம் காலதாமதமாகியுள்ளமை தொடர்பில் தான் வருத்தமடைவதாகவும் தேசிய கணக்காய்வு சட்டத்தை அமுல்படுத்த துரித நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி நாட்டுக்கும் மக்களுக்கும் 66 ஆண்டுகளாக ஆற்றிய வரலாற்றுப் பணிகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, ஊழலற்ற தூய்மையான அரசியல் இயக்கமாக கூட்டுணர்வுடன் கட்சியை கட்டியெழுப்புவதற்கான பரந்த அரசியல் செயற்றிட்ட செய்தியை நாட்டுக்கு வழங்குவதற்காகவே செப்டெம்பர் மூன்றாம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66 ஆண்டுவிழா கொண்டாடப்படுவதாக தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடக நிறுவன தலைவர்களை சந்தித்தபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.


கூட்டு அரசாங்கமே மோசமான நிலையிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்டு, நாடு முகம்கொடுத்த பல்வேறு சவால்களை வெற்றிகொண்டதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டுக்கும், மக்களுக்குமான பணியை ஆற்றுவதற்காக கூட்டரசாங்கத்தின் பயணத்தை பலப்படுத்துவதற்கும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியையும் தூய்மையான, பலமான அரசியல் இயக்கமாக கட்டியெழுப்புவதற்கும் தாம் பாடுபடுவதாக தெரிவித்தார்.

ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் இன்றி செயற்படக்கூடிய அரசியல்வாதிகள் இருக்கும், தூய்மையான அரசியல் இயக்கமே இன்று நாட்டுக்கு தேவையாகுமென தெரிவித்த ஜனாதிபதி, குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலிலிருந்து விடுபட்டு நாட்டை முதன்மைப்படுத்தி, நாட்டுக்கான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் ஒன்றிணைய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

நாட்டில் பல சமூக மாற்றங்களை ஏற்படுத்திய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிறுவுநர் பண்டாரநாயக்க முகம் கொடுத்தது போன்றே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் என்ற வகையில் கட்சி செயற்பாடுகளையும், நாட்டின் தலைவராக அரசாங்க செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் போது தாமும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, முன்னைய தலைவர்கள் நாட்டுக்கும், கட்சிக்கும் வழங்கிய தலைமை மற்றும் அவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட முறைகளை ஆய்வு செய்து தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் மங்கள சமரவீர, பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-7)

# மகிந்த ராஜபக்ஷவுக்கு இதுவரை அழைப்பில்லை



(கொழும்பு)

செப்டெம்பர் மாதம் இடம்பெற உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு விழாவிற்கு இதுவரை தனக்கு அழைப்பு கிடைக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேவேளை கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் பல உறுப்பினர்களுக்கு ஆண்டு விழாவிற்கான அழைப்பு கிடைக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார். (இ-7)

# எட்கா ஒப்பந்த 2 ஆம் சுற்று பேச்சு ஒக்டோபர் மாதம் டில்லியில்

(கொழும்பு)

எட்கா ஒப்பந்தம் குறித்த இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஒக்டோபர் மாதம் டில்லியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது எட்கா ஒப்பந்தத்தில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான சேவை மற்றும் பொருட்கள் பரிமாற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது. இதன்படி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக பேச்சுவார்த்தைகள் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது கலந்துரையாடப்படவுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் எட்கா ஒப்பந்த ஆலோசனைக் குழு மேலும் தெரிவித்துள்ளதாவது.

எட்கா ஒப்பந்தம் தொடர்பில் முழுமையான இருதரப்பு இணக்கப்பாடுகள் இதுவரையிலும் எட்டப்படவில்லை.

ஆயினும் முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை விட அதிகமான பரப்புகளில் இரண்டாம் தர பேச்சுவார்த்தை நடைபெறும். குறிப்பாக தகவல் பரவலாக்கம் மற்றும் சேவை அமுலாக்கம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே எட்கா ஒப்பந்தம் தொடர்பில் இலங்கை, இந்தியாவின் நிலைப்பாடுகள் பல்வேறு மட்டங்களில் வெளிப்பட்டுள்ளன. அந்த தகவல் பரிமாற்றங்களும் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய இடம் வகிக்கவுள்ளன. சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, வர்த்தகம் ஆகிய துறைகள் சம்பந்தமாக இதன் போது ஆராயப்படவுள்ளன.

ஏற்கனவே தொழில்நுட்ப, தகவல் பரிமாற்றல் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் சமரசம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்தக் கட்ட நகர்வுக்கு செல்வதற்கு இப் பேச்சுவார்த்தைகள் பெரிதும் தாக்கம் செலுத்தும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்கா ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளின் இறையாண்மை மீது நேரடியான தாக்கம் செலுத்தும் என முதற்சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவில் பல தரப்பினராலும் விமர்சிக்கப்பட்ட நிலையில் பல எதிர்ப்பு போராட்டங்கள் இலங்கையில் நடத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### படிக்கச் சொல்லிப் படுத்தும் பெற்றோர்!

சென்னையில் ஒரு பிரபலமான பள்ளியில் பிரமாதமான ரிசல்ட் வரவேண்டும் என்பதற்காக மாணவ, மாணவிகளைப் போட்டுப் பாடாய்ப் படுத்துவதை நான் அறிவேன்.

நூறு சதவிகித பாஸ்; மாநிலத்திலேயே அதிக மதிப்பெண்கள் என்றெல்லாம் சில இலக்குகளை வைத்துக் கொண்டு பிள்ளைகளின் நல்லுணர்வுகளைக் கருக்கிக் கொண்டிருக்கிறார்கள், போதாக்குறைக்குப் பெற்றோரையும் முடுக்கி விடுகிறார்கள்.

பள்ளியில் லேத் இயந்திரங்கள் போல் மாணவர்களை முடுக்கி அழுத்திக் கொள்வதும் பெற்றோர் பிள்ளைகளைக் கடைவதுமாகப் பாடசாலை வாழ்க்கை ஓடுகிறது.

பாடத்தின் மீது எப்படி வரும் பிரியம்?

எனக்குத் தெரிந்து ஒரு பையன் காலையில் ஏழரைக்குப் புறப்பட்டுப் பாடசாலை போய் மாலை பாடசாலை முடிந்ததும் நேரே டியூசனுக்குப் போய் அதை முடித்து வீடு வந்ததும் ஹோம் வேர்க் எழுதி முடித்து, மறுநாள் விடிகாலை எழுந்து பாடங்களைப் படித்துப் பள்ளி புறப்படுகிறான்.

ஆக, தூங்கும் நேரம் தவிர அவனது வேலையெல்லாம் படிப்புதான். இவையெல்லாம் எத்தனை வயதுப் பையனுக்கு என்கிறீர்கள்? எட்டு வயதுப் பையனுக்கு.

ஐயகோ! என்ன கொடுமை இது? இனிமையான இளவயதுப் பொழுது, இப்படியா கழிய வேண்டும்?

இன்னொரு சம்பவம். எங்கள் வீட்டிலிருந்து பத்து வீடுகள் தள்ளி இருக்கும் ஒரு வீட்டில் ஒரு பையனுக்கு செம அடி; காரணம் கேட்டால் பரிதாபப்படுவீர்கள். இவன் 92 மார்க் எடுத்தானாம். ஏன் நூறு மார்க் எடுக்கவில்லை என்பதற்காகத் தான் அடி. எப்படி இருக்கிறது கதை?

பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும்; இல்லாவிட்டால் இந்தப் போட்டி மிகுந்த உலகில் சரியான மேற்படிப்போ வேலை வாய்ப்போ கிடைக்காது என்று வாதிட முன்வரும் பெற்றோர் ஒரு சில விடயங்களையேனும் பரிசீலிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்குக் கல்வியின் அவசியத்தை அன்பாக எடுத்துச் சொல்ல வேண்டும். பிரம்பால் வராத கல்வி, அன்பால் வரும். ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி கல்வியைப் பெற வேண்டும். கட்டாயப்படுத்தியோ துன்புறுத்தியோ படிக்க வைக்கப்படும் பிள்ளைகள் கல்வியை வெறுக்க ஆரம்பித்து, திடீரென சராசரிக்கும் கீழே போய் விடுகிறார்கள். காரணம் பிள்ளைகள் மட்டும் "நேர் எதிர் குணம்" உடையவர்கள். எதைச் செய்ய வேண்டும் என வற்புறுத்தினாலும் அதைச் செய்ய வேண்டும் என வற்புறுத்தினாலும் அதைச் செய்யமாட்டார்கள். மாறாக செய்யாதே என்பதை அதிகம் செய்வார்கள்.

கல்வி என்பது வாழ்க்கைக்கு அவசியம் தான். ஆனால் அது இளமைகளின் இனிமைகளைக் கருக்கிவிடக் கூடாது. நன்றாகப் படித்தால் போதும் அல்லது சராசரிக்கு மேலாகப் படித்தால் போதும் என்று எந்தப் பெற்றோர் மனநிறைவு அடைகிறார்களோ அவர்களே மனிதாபிமானம் உள்ள பெற்றோராக இருக்க முடியும். பிள்ளைகளுக்கும் அப்போதுதான் கல்வி கசக்காமலிருக்கும்.

லேனா தமிழ்வாணன்

# அலோசியஸ் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவு

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கியின் பாரிய நிதி மோசடி விவகாரத்தின் பிரதான சூத்திரதாரியென சந்தேகிக்கப்படும் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அவரது பெர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் நிறுவனம் மீது ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.**





ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த போதே மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தப்புல டீ லிவேரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பெர்பெச்சுவல் நிறுவனத்தின் உண்மையான தரவுகளை மாற்றி ஆணைக்குழுவிற்கு அவர் அனுப்ப முயற்சித்தமை பாரிய குற்றச்சாட்டு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2015ஆம் ஆண்டு நடந்த பிணைமுறி மோசடி தொடர்பான கணனி பதிவுகளை அலோசியஸ்2017ஆம்ஆண்டு ஜூலை மாதம் 06ஆம் திகதியன்றே மாற்றியிருக்கின்றார் என ஆணைக்குழுவின் புலனாய்வு பிரிவினர் கண்டுபிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை அவ்வாறு மாற்றப்பட்ட 25 தரவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

எனவே, இந்த தரவுகளின் அடிப்படையில் பெர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி இதுவரை வழங்கியிருக்கும் சாட்சியங்கள் பொய்யானவை எனக் கருதப்பட வேண்டும் என ஜெனரல் தப்புல டீ லிவேரா ஆணைக்குழுவின் முன்னிலையில் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# அடுத்த மாதம் பாரிய போராட்டங்களை முன்னெடுப்போம்

## அரச வைத்தியர்கள் எச்சரிக்கை

சைட்டம் நிறுவனத்தை மூடும் வரையில் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.



அடுத்த மாதத்தில் சைட்டதிற்கு எதிரான பாரிய போராட்டங்களுக்கு தயாராகிக் கொண்டிருப்பதாக அந்த சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே கூறினார்.

சைட்டதிற்கு எதிராக நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தீப்பற்றிய இரவு என்ற எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த அவர் இதனைக் கூறினார்.

நாடு பூராகவும் பல பிரதேசங்களில் தீப்பந்தங்களை ஏந்திய வண்ணம் நேற்று முன்தினம் இரவு சைட்டமுக்கு எதிரான போராட்டம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ)

# உப தபாலக பொறுப்பதிகாரியான காஞ்சனமாலாவின் மரணத்தில் மர்மம்

## உடலில் விசத்தன்மை

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குறுந்துகஹ ஹெதப்ம உப தபால் நிலையத்தில் தீப்பரவலின் பின்னர் சடலமாக மீட்கப்பட்ட பெண் தபால் பொறுப்பதிகாரியான காஞ்சனமாலா என்பவரின் மரணத்தில் பல மர்மங்கள் நிலவுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் எல்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கீழ் அது தொடர்பில் விசேட விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேசத்தின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். விசேடமாக குறித்த பெண் தபால் பொறுப்பதிகாரி கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்துகொண்டுள்ளாரா என்ற கோணத்தில் கிடைக்கப்பெற்றுள்ள சாட்சியங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த தபால் பொறுப்பதிகாரியின் சடலம் மீது எல்பிட்டிய வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனைகளின் பின்னர் திறந்த தீர்ப்பொன்று வழங்கப்பட்டு சடலத்தின் பாகங்கள் மேலதிக ஆய்வுக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பாக அவரது உடலில் விஷத்தன்மை காணப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனைகளின் போது தெரிய வந்துள்ள நிலையில், தீக்கிரையான தபாலகத்தில் இருந்து விஷப் போத்தல் ஒன்றும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த கட்டடத்துக்குள் இருந்து மண்ணெண்ணெய் இல்லாத குப்பி விளக்கொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், விஷம் அருந்திய பின்னர் குறித்த பெண் தீப் பரவலை ஏற்படுத்தி தற்கொலை செய்துகொண்டாரா என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் பிரதேச மக்கள் சிலரின் சாட்சியங்கள் இது கொலைச் சம்பவமாக இருக்கலாம் எனும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. தபாலகத்தின் பிரதான வாயிலில் இரு பூட்டுக்கள் உடைக்கப்பட்டிருந்ததாகவும், தபாலக இலாச்சியும் திறந்த நிலையில் இருந்ததாகவும் பொது மக்கள் சிலர் கூறியுள்ள நிலையில், இந்த தீப் பரவலும், பெண் பொறுப்பதிகாரியின் மரணமும் திட்டமிடப்பட்ட சம்பவம் என சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன் வாயிலின் பூட்டுகள் உடைக்கப்பட்டுள்ளதை அவதானித்துள்ள நபரொருவர் உடனடியாக தபாலகத்தில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ள, உயிரிழந்த தபால் பொறுப்பதிகாரியின் வீட்டுக்கு விடயத்தை கூற சென்றுள்ளார்.

இதன்போது அவர் தபாலகம்சென்றுவிட்டதாக கூறவே மீள அங்கு சென்று பார்த்த போது புகை எழுவது கண்டு பிரதேச மக்கள் தீப் பரவல் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இந்நிலையிலேயே தீயை அணைத்த பின்னர் சடலமாக குறித்த பெண் மீட்கப்பட்டுள்ளார். அந்த தபால் பொறுப்பதிகாரி, பல தடவைகள் சிறந்த உப தபால் பொறுப்பதிகாரியாக விருது வென்றவர் என தெரிய வருகின்றது. (இ-7)

# தண்டனையிலிருந்து தப்பிக்கும் நிலை முடிவுற வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து



தண்டனையிலிருந்து தப்பிக்கும் நிலை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளை முன்னிட்டு, கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடந்த, நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.


காணாமல் போதல்- இனி ஒருபோதும் வேண்டாம் என்ற தொனிப் பொருளில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலை அரசாங்கம் வெளியிட வேண்டும் என்றும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணியகத்தை உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்றும், வலியுறுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் பங்கேற்றிருந்தனர். (இ-7)

# 20 ஐ பாராளுமன்றில் அரசு நிறைவேற்றும்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு மாகாண சபைகள் அங்கீகாரமளிக்காவிடின் பாராளுமன்றில் அதனை அரசு நிறைவேற்றும் என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட மூலம் அனைத்து மாகாண்ண சபைகளிலும் தொடர்ச்சியாக தோற்கடிக்கப்பட்டவாறு உள்ளது. ஒரே தினத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அனைவரும் ஒன்றிணைந்து எடுத்த தீர்மானமே.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒரே தினத்தில் நடத்துவது போன்று மாகாண சபைத் தேர்தல் மற்றும் பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது குறித்து ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகள் மாகாண சபைகளால் நிராகரிக்கப்பட்டால் பாராளுமன்றம் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முதலாவது பெண் நீதியமைச்சர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

புதிய நீதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் தலதா அத்துகோரள நேற்றுக் கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். அமைச்சர் தலதா அத்துகோரள இலங்கை வரலாற்றில் முதலாவது பெண் நீதியமைச்சராவார்.

நீதியமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ மீது ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சில அமைச்சர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணையைகொண்டு வருவதற்கும் முயற்சித்தனர்.

இந்த நிலையில் அவரை பதவியிலிருந்து நீக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைத்ததைத் தொடர்ந்து இவர் அனைத்து அமைச்சு பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டார்.

அவர் வகித்த நீதியமைச்சர் பதவிக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரளவும் புத்தசாசன அமைச்சராக காமினி ஜெயவிக்ரம பெரேராவும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.







இதையடுத்துநேற்று அமைச்சர் தலதா அத்துகோரள நீதியமைச்சராக தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். (இ-7)

# எக்காரணத்திற்காகவும் எனது பாதையை மாற்றப்போவதில்லை- ஜனாதிபதி உறுதி

## அமெரிக்கா பாராட்டு

நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காகவும் ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் பாராட்டத்தக்கவை என அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவி இராஜாங்க செயலாளர் எலிஸ் வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

பல்வேறு விமர்சனங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் ஜனாதிபதி மேற்கொள்ளும் இந்த வரலாற்று ரீதியான நடவடிக்கைகளின் வெற்றிக்கு ஐக்கிய அமெரிக்கா தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கும் என நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் ஜனாதிபதியை சந்தித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நீதி, சமத்துவம், இன நல்லிணக்கம், சகவாழ்வு, அரசியலமைப்பு திருத்தங்கள், நிலையான சமாதானம் போன்ற அனைத்து துறைகளிலும் இலங்கை தற்போது முன்னேற்றம் அடைந்து வருவதாக ஐக்கிய அமெரிக்கா நம்புவதாகவும் எலிஸ் வெல்ஸ் இதன்போது தெரிவித்தார்.

நல்லிணக்க செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்வதில் பல்வேறு தடைகள் காணப்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி, அரசியல் ரீதியான இலாபங்களை பெறுவதற்காக மக்களை தூண்டுவதற்கு சில இனவாத சக்திகள் முயற்சிப்பதுடன், நல்லிணக்க செயற்பாடுகளுக்கும் தடைகளை ஏற்படுத்துகின்றன. எனினும் எக்காரணத்திற்காகவும் தனது பாதையை மாற்றப்போவதில்லை என்றும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

நல்லிணக்க செயற்பாடுகளின் பெறுபெறுகள் துரிதமானதாக இல்லாவிடினும், நிலையான ஒரு குறிக்கோளுடன் வெற்றிகரமாக முன்னோக்கி பயணிப்பதாக ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

அண்மையில் தெற்காசியா மற்றும் பசுபிக் வலயத்திற்கான அமெரிக்காவின் புதிய தந்திரோபாய செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த உதவி இராஜாங்க செயலாளர், இத்திட்டத்தின் முக்கிய அங்கத்தவராக இலங்கையும் செயற்படும் என ஐக்கிய அமெரிக்கா எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகளுக்கான மிலேனியம் சவால்கள் கூட்டுறவு நிறுவனத்தின் உதவிகளை அண்மையில் இலங்கைக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக எலிஸ் வெல்ஸ் இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம், அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் உள்ளிட்ட குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-7)

# இராணுவ சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

அரலகங்வில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்மின்ன இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குறித்த இராணுவச் சிப்பாய் தனது துப்பாக்கியினால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.


பேராதனை ஹோடியா தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான டபிள்யூ. எம். தொடம்வெல என்னும் சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

எனினும், தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை.

உயிரிழந்த படைச் சிப்பாயின் சடலம் அரலகங்வில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக மலையகத்தில் 'தீப்பற்றிய இரவு' போராட்டம்





மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியின் விவகாரம் தொடர்பில் மருத்துவ பீட மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு "தீப்பற்றிய இரவு" என்னும் தொனிப்பொருளில் போராட்டத்தை மலையகத்தில் முன்னெடுத்துள்ளனர்.

அதனடிப்படையில் ஹற்றன், நுவரெலியா, தலவாக்கலை போன்ற பகுதிகளிலும் இப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தலவாக்கலை நகரின் மத்திய பேருந்து தரிப்பு நிலையத்திற்கு முன்னால் சைட்டத்துக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும் என கோரி தீப்பந்தங்களை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பி, போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

மருத்துவ பீட மாணவர்கள் உள்ளிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்க பிரிவுகள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

தேசிய எதிர்ப்பு போராட்டத்தை நடாளாவிய ரீதியில் முன்னெடுத்த மருத்துவ பீட மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு நாடளாவிய ரீதியில் "தீப்பற்றிய இரவு" போராட்டத்தையும் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியின் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக மருத்துவபீட மாணவர்கள் கொழும்பில் உண்ணாவிரத போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கை இராஜதந்திரியான இந். பிரஜை டில்லியில் கைது

இலங்கையின் இராஜதந்திரி எனக்கூறி விசேட இலக்கத்துடன் கார் ஒன்றை பயன்படுத்தி வந்த இந்திய பிரஜை ஒருவர் டில்லியில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் சஹாரா மாவட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர், கிருஸ்ணநகரை சேர்ந்த நிட்டின் மல்ஹோத்ரா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மல்ஹோத்ரா, இலங்கை அமைச்சர் ஒருவரின் வாகனத்தை எடுத்து வந்து அந்த இலக்கத்துடனேயே அதனை பயன்படுத்தி வந்துள்ளார்.

எனினும் இந்த இலக்கத்தை கடந்த வருடமே இந்திய உயர்ஸ்தானிகரகம் ரத்துச்செய்திருந்தது.

இந்நிலையில் குறித்த வாகனத்துக்கு புதிய பதிவு இலக்கம் வழங்கப்பட்ட போதும் மல்ஹோத்ரா, பழைய இலக்கத்துடனேயே வாகனத்தை பயன்படுத்தி வந்துள்ளார் எனத் தெரிய வருகின்றது. (இ-7)

# அரசியல் அமைப்புச் சபையில் விஜயதாஸ நீடிக்க முடியுமா?

## சபாநாயகர் ஆராய்வு

பதவியில் இருந்து விலகிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இலங்கையின் அரசியல் அமைப்பு சபையில் தொடர்ந்தும் நீடிக்க முடியுமா? என்பது தொடர்பில் ஆராயவுள்ளதாக சபா நாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு சபைக்கான தமது பிரதிநிதியாக விஜயதாஸ 2015ஆம் ஆண்டு பிரதமரால் நியமிக்கப்பட்டார்.

இதனை தவிர அந்தக் குழுவில் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் ஆர். சம்பந்தன், சர்வோதய தலைவர் ஏ.டி ஆரியரட்ன, ராதிகா குமாரசுவாமி, சிப்லி அஸீஸ், அமைச்சர் ஜோன் செனவிரட்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க போன்றோர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தநிலையில் அமைச்சு பதவியில் இருந்து விலகியுள்ள அவர், தொடர்ந்தும் அரசியலமைப்பு சபையில் அங்கம் வகிக்க முடியுமா? என்பது குறித்து உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கவுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அதிபர் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இணுவில் இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

உடுவில் கல்விக் கோட்ட அதிபர்கள் அனைவரையும் உரிய நேரத்திற்கு வந்து தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் இரா.ஜெயக்குமார் அறிவித்துள்ளார். (இ-3)

# நினைவு முத்திரை ஜனாதிபதிக்கு

செப்டெம்பர் 01ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய காப்புறுதி தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் தபாலுறை, தபால் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் பிரதி அமைச்சர் துலிப் விஜயசேகரவினால் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

காப்புறுதி நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க செப்டெம்பர் 01ஆம் திகதியை தேசிய காப்புறுதி தினமாக பிரகடனப்படுத்துவதற்கு இலங்கை காப்புறுதி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை காப்புறுதி சபையின் தலைவி இந்ராணி சுகததாச மற்றும் அதன் பணிப்பாளர் நாயகம் தமயந்தி பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினர் இந்நிகழ்வில் இணைந்து கொண்டனர். (இ-7)

## சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு டாக்டர் பட்டம் வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு தமிழ்நாடு, மத்திய பல்கலைக்கழகம் வழங்கியுள்ள கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தலைமையுரையினை கொழும்பு தொழில்நுட்பக்கல்விப் பயிற்சித் திணைக்கள தலைமைச் செயலகப் பணிப்பாளர் பேராசிரியர் நா. யோகராஜா ஆகியோர் வழங்குவர். யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் கந்தையா தேவராசா ஆகியோரின் சிறப்புரையும் விருது வழங்கலும் இடம்பெறும். இந்நிகழ்வில் ஏற்புரையினை ஆச்சிரம சுவாமிகள் வழங்குவார். (இ-3)

## குப்பை மேட்டுக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்



நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட பத்தனை நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குப்பை மேட்டு விவகாரம் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொதுவான குப்பை மேட்டில் அளவுக்கு அதிகமான குப்பைகளை நுவரெலியா பிரதேச சபை கொட்டி வருவதாகவும் இதனால் இப்பகுதியில் வசிக்கின்ற மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாகவும் கூறி நேற்று பத்தனை பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை நுவரெலியா பிரதேச சபையின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தினர். (இ-7)

## தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் கைச்சாத்திட்டார்



உள்ளூராட்சி மன்ற தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் நேற்றுக் காலை சபாநாயகர் கருஜெயசூரிய கையெழுத்திட்டுள்ளார்.

இந்தச் சட்டமூலத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலானது கலப்பு முறையில் அதாவது, 60 வீதம் தொகுதி வாரி முறையிலும் 40 வீதம் விகிதாசார முறையிலும் நடைபெறவுள்ளதோடு பெண்களுக்கு 25வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறியதும் புதிதாக எல்லை நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டது.


அக்குழுவானது எல்லை நிர்ணயத்தினை வகுப்பதற்கான பணியினை ஒருவருட காலமாக மேற்கொண்டு கடந்த டிசெம்பர் மாதம் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எல்லை நிர்ணய அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது. எனினும் தொடர்ச்சியாக இழுபறிகள் இடம்பெற்று வந்தன.

குறிப்பாக தொகுதிவாரி முறைமை. விகிதாசார முறைமை ஆகியவற்றுக்கான சதவீதங்கள், பெண்களுக்கான ஒதுக்கீட்டுச் சதவீதங்கள் குறித்து தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வந்திருந்தன.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது குறிப்பாக சிறு,சிறுபான்மை அரசியல் கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து அனைத்து தரப்புக்களுக்கிடையிலும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. இவ்வறான நிலையிலேயே மேற்குறித்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துமாறு தொடர்ச்சியாக தேசிய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முப்படையினரின் நினைவுத் தூபிக்கு அமெரிக்க இராணுவத்தினர் அஞ்சலி



இலங்கையில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள முப்படையினரின் நினைவுத் தூபிக்கு முதல் தடவையாக அமெரிக்க இராணுவ பிரதிநிதிகள் ஐவர் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தினர்.

மேஜர் ஜோன். மேஜர் மைல்ஸ் எ பேக்கர் மற்றும் அமெரிக்க இராணுவத்தின் கப்டன் யெரெமி டிக்சன் ஆகிய அமெரிக்க பிரதிநிதிகள் இவ்வாறு அஞ்சலி செலுத்தினர்.

அவர்கள் இலங்கை யுத்தத்தின் போது மரணித்த முப்படையினரது நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்தியதாக இராணுவத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அவர்களுடன் இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு உபதேசகர் லெப்டினண்ட் கேணல் டக்ளஸ் ஹெஸ்ஸும் இதில் பங்கேற்றுள்ளார். (இ-7)

## தளபதிகள் சந்தித்தனர்

(கொழும்பு)

புதிய கடற்படை தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா மற்றும் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

விமானப்படை தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் கடற்படை தளபதி



விஜயம் மேற்கொண்டிருந்த போதே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது விமான படையின் கொழும்பு முகாமின் கட்டளை அதிகாரி எயார் கொமாண்டர் வருனு குணவர்தன மூலம் சம்பிரதாய முறைப்படி கடற்படை தளபதி வரவேற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சந்திப்பின் இறுதியில் ஞாபகார்த்தமாக நினைவுச்சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1178

Search for people places and things — Nagendram Home


### விக்கி




### சுதன்




### கார்த்தி




### விஷ்ணு




### மகிந்தன்




### சுகாசினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## எலியும் பூனையும்



ஜூலியால் பிக்போசை விட்டு வெளியேறப் போகும் சிநேகன் எலியும் பூனையுமாக மாறினர். பிக்போசில் ரீ என்ட்ரி கொடுத்த ஜூலி காஜலுடன் பேசிக்கொண்டு இருக்கிறார். அப்போது அவர் கூறும்போது, பிக்போஸ் வீட்டிற்கு நான் முதலில் வந்தபோது எல்லோரும் என்னை விட பெரியவர்கள் என்ற நினைப்பில் யாருடனும் சரியாக பேச முடியவில்லை.

அதன்பிறகு எல்லோரும் என்னை போன்றே போட்டியாளர்கள் என்று தெரிய வந்ததால் அனைவருடனும் சகஜமாக பேச ஆரம்பித்தேன். எல்லோரும் என்னை பற்றி தப்பாத்தான் பேசி இருக்காங்க என்பது பின்னர்தான் தெரிய வந்தது.

இதில் என்னை ரொம்ப நம்ப வைத்து கழுத்தறுத்தது சிநேகன்தான். என்னிடம் ஒன்றும், மற்றவர்களிடம் ஒன்றும் பேசினார். மேலும் ஓவியாவிடம் என்னை பற்றி தப்பு தப்பாக பேசினார் என்றார்.

இதன் மூலம் பிக்போசில் சிநேகனும், ஜூலியும் எதிரிகளாக மாறி விட்டார்கள் என்பது மட்டும் தெரிகிறது. ஆனால் காயத்ரி மற்றும் சக்தியால் தான் அவர் இந்த நிலைக்கு ஆளானார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் அதனை எல்லாம் மறைத்து சிநேகன் தான் கெட்ட பெயர் வர காரணம் என்பது போல கூறி வருகிறார்.

## ஆரவின் மழுப்பல்

பிக்போஸ் வீட்டில் நடிகை ஓவியா ஆரவ் விடம் காதலை சொன்னபோது அவர் அதை நிராகரித்துவிட்டார். பின்னர் ஓவியாவும் வீட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

தற்போது இது பற்றி ஆரவ்விடம் கேட்ட ஆர்த்தி, "நீங்கள் வெளியில் செல்லும் போது ஓவியா உங்களுக்காக காத்திருந்து மீண்டும் ப்ரேர்போஸ் செய்தால் ஏற்றுக்கொள்வீர்களா?" என கேட்டார்.

அதற்கு ஆரவ் மழுப்பலாக "அதை அப்போ பார்ப்போம். நான் எதுவும் இப்போ யோசிக்கல. என்னுடைய பெற்றோர், மற்றவர்கள் பற்றி யோசிக்காமல் எப்படி நான் காதலை ஏற்றுக்கொள்ள முடியும்" என கூறினார்.

## யாரில் பிழை

நடிகை ஓவியா பற்றி ஜூலி சொன்ன ஒரு பொய் காரணமாக அவரை வெறுப்பவர்கள் அதிகமாகி விட்டனர்.

தற்போது மீண்டும் பிக்போஸ் வீட்டுக்குள் நுழைந்துள்ள ஜூலியை எனக்கு சுத்தமாக பிடிக்காது என நடிகை சுஜா வருணி வெளிப்படையாகவே கூறினார்.

அந்த பொய் பற்றி பின்னர் இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். "பொய் சொல்லாமல் உண்மையாக இருப்பது சின்ன வயசில் இருந்து பெற்றோர் சொல்லிக்கொடுக்கும் விடயம்" என சுஜா கூறினார்.

அதற்கு கோபமான ஜூலி 'எங்க அப்பா அம்மா நல்லா தான் சொல்லி கொடுத்திருக்காங்க" என கூறினார்

## பெண்களைச் சுற்றும் ஆரவ்



பிக்போஸ் நிகழ்ச்சியில் ஆரவால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகம். ஓவியா வெளியேறியதற்கு கூட ஆரவ்தான் முக்கிய காரணம். அவர் எப்போதும் பெண்கள் பின்னாடி தான் இருந்து வருகிறார்.

சினிமாவில் வாய்ப்பு கிடைக்கும் என்பதால் காயத்ரி, சிநேகன் மற்றும் சக்தியை சுற்றி சுற்றி வந்தார். மேலும் ஓவியாவை ஆரவ் கழட்டி விட காயத்ரியும், சக்தியும்தான் காரணம் என்று கூறப்படுகிறது.

இவ்ர்கள் சென்ற பிறகு ஆரவின் நிலை மோசமாக உள்ளது. மேலும் ஹரீஷை அழைத்து வந்த பிறகு ஆரவின் நிலை பரிதாபமாக உள்ளது.

தற்போது காஜலுடன் மிகவும் நெருக்கமாக உள்ளார். தன்னை காப்பாற்றி கொள்ள பெண்களையே நம்பி இருக்கும் நிலை ஏற்பட்டு இருக்கிறது.

பிக்போஸ் வீட்டில் தற்போதுள்ள நிலையில் காஜலை யாருக்கும் பிடிக்கவில்லை. எனவே காஜலுடன் இருந்தால்தான் பாதுகாப்பு என்று கருதி அவரையே சுற்றி சுற்றி வருகிறார்.

இதனை பார்வையாளர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஓவியா விஷயத்தில் இவ்வளவு செய்துவிட்டு குற்ற உணர்ச்சியே இல்லாமல் ஆரவ் இருக்கிறார். எனவே ஆரவ் மற்றும் காஜலை சேர்த்து வைத்து எக்கச்சக்க மீம்ஸ்களை போட்டு வருகின்றனர்.

## பிந்துவுக்கு கல்யாணம்



பிக்போஸ் வீட்டில் உள்ள போட்டியாளர்கள் இந்த வாரம் மதுரை மற்றும் NRI என இரண்டு அணிகளாக பிரிந்து இருக்க வேண்டு என டாஸ்க் கொடுக்கப்பட்டது.

முதலில் மதுரை அணி அனைத்து வேலைக ளையும் செய்யவேண்டும் என கூறப்பட்டது, ஆனால் அது தலைகீழாக மாற்றப்பட்டது. அதனால் மதுரை வீட்டில் இருப்பவர்களுக்கு தான் பவர் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

நாட்டாமையாக உள்ள வையாபுரி பிந்து மாதவிக்கு கல்யாணம் செய்து வைக்கும் முயற்சியில் இறங்கினார்.

"நான் மதுரை பையனை தான் கல்யாணம் செய்து கொள்வேன்" என பிந்து சொல்ல, அவர் உடனே ஹரிஷ் கல்யாணுக்கும் பிந்துவுக்கும் கல்யாணம் என கூறிவிட்டார்.

## பெருந்தன்மை



மக்கள் ஒருவரை பற்றி தவறாக நினைத்துவிட்டார்கள் என்றால் பிறகு அந்த எண்ணம் மாறவே மாறாது. அப்படித்தான் BiggBoss நிகழ்ச்சியில் ஜூலி நடந்து கொண்டதை பார்த்த ரசிகர்களுக்கு அவர் பொய்யானவர் என்ற எண்ணம் தோன்றிவிட்டது, அவரும் அப்படித்தான் நிகழ்ச்சியில் நடந்து கொண்டார்.


இந்த நிலையில் ஜூலி, பிந்து மாதவியிடம் நான் வயிறு வலியால் துடித்தது நடிப்பு என்கிறார்கள், பரணி, ஓவியா விடயத்தில் தவறு தான் செய்துவிட்டேன் ஒப்புக் கொள்கிறேன்.

மக்களுக்கு இந்த ஜூ லி எப்போதுமே மாற மாட்டாள் என்கிற எண்ணம் இருக்கிறது. என்னை எவ்வளவு தான் திட்டுவீர்கள், நீங்கள் திட்ட திட்ட நான் மிகவும் தைரியமான பெண்ணாக மாறி வருகிறேன் என்று கூறுகிறார்

### சுத்தமான குடிநீர் கேட்ட

# பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு!

# பிரிகேடியர் அநுரவுக்கு நேற்றுப்பிணை



(கொழும்பு)

**ரத்துபஸ்வலவில் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரிகேடியர் அநுர தேசப்பிரிய மற்றும் இராணுவ சார்ஜன்ட் ஆகியோருக்கு நேற்று நீதிமன்றம் பிணை வழங்கியது. இவ் வழக்கு கம்பஹா மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிணை வழங்கப்பட்டுள்ளது.**

கடந்த 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி ரத்துபஸ்வல பிரதேச மக்கள் சுத்தமான குடிநீர் கேட்டு நடத்திய ஆர்ப்பாட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பாடசாலை மாணவர்கள் இருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பிரிகேடியர் அநுர குணவர்தன தேசப்பிரிய உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களுக்கு பிணை மறுக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# அலிஸ் வெல்ஸ் ஜனாதிபதியுடன் சந்திப்பு





இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ், நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் நடைபெறும் இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தார்.

அவர் நேற்று முன்தினம் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப்புடன் இணைந்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் பற்றிய தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.

அதேவேளை, இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் இலங்கை அரச அதிகாரிகள், வர்த்தக மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார். (இ-7)

# பாலியல் ரீதியிலான சீண்டல்களுக்கு முற்றுப்புள்ளி

## புதிய கருவிகள் அறிமுகம்

பொதுப்போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களில் பயணிக்கும் போது பாலியல் ரீதியிலான சீண்டல்களுக்கு ஆளாகும் பெண்களை பாதுகாப்பதற்கான விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தொழில்நுட்ப கருவிகளின் உதவியுடன் மேற்படி திட்டத்தினை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக வீதி பாதுகாப்பிற்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான பாலியல் ரீதியிலான நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கும் பெண்களின் பாதுகாப்பு குறித்து பெரிதும் அவதானம் குன்றி வருகின்ற நிலையிலேயே இத்திட்டத்தினை அமுல்படுத்தவுள்ளதாகவும் மேற்படி சபை சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய நாடுகள்சபையின்சனத்தொகை நிதியம் நடத்தியுள்ள ஆய்வொன்றின் பிரகாரம் இலங்கையில் பொது போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களில் பயணிக்கும் 90 வீதமான பெண்கள் இந்நிலைக்கு ஆளாவதாக தெரியவந்துள்ளது.

மேற்படி நெருக்கடிக்கு உள்ளாகும் தொகையில் 4 வீதமானவர்களுக்கு மாத்திரமே பொலிஸாரால் பாதுகாப்பு வழங்க முடிகின்றது எனவும் மற்றவர்கள் நாளாந்தம் இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கின்றார்கள் என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண்களுக்கு இவ்வாறான நெருக்கடிகளை கொடுப்பவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பது பற்றிய தெளிவின்மையும் இந்நிலை வலுவடைய காரணமாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சில பஸ்களில் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் பெண்களின் முறைப்பாடுகளை ஏற்பதற்கு பெண் பொலிஸாரை சேவையில் அமர்த்தவுள்ளோம். இவற்றை தவிர மேலதிக செயற்பாடுகளாக இனிவரும் நாட்களில் விசேட ரோந்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துபெண்களுக்கு நெருக்கடி கொடுப்பவர்களை மடக்கிப்பிடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# லெபனான் பிரஜையை நாடு கடத்த கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு

தனது நாட்டில் நடைபெறும் வழக்கு விசாரணைக்காக சந்தேக நபரை நாடு கடத்துமாறு அமெரிக்க அரசாங்கம் இலங்கையிடம் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து அமெரிக்காவில் பாரிய நிதி மோசடியில் ஈடுபட்ட அஹமத் பாக்கி எனும் லெபனான் பிரஜையை உடனடியாக நாடு கடத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபரை நாடு கடத்த உத்தரவிடுமாறு கோரி சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவொன்றை விசாரித்த பின்னரே நீதிபதி இந்தத் தீர்ப்பை வழங்கினார் என, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதேவேளை அரச தரப்பின் வேண்டுகோள் தொடர்பாக ஆட்சேபனை தெரிவித்த சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரருக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை எதுவும் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை என தெரிவித்தார்.

மேலும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத நிலையில் ஒரு சந்தேகநபரை நாடு கடத்த முடியாதென்றும் அவரை விடுதலை செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து பதிலளித்த நீதிபதி, சந்தேகநபரை நாடு கடத்த தேவையான ஆதாரங்கள் நீதிமன்றம் முன் இருப்பதாக கூறியதோடு அவரை உடனடியாக நாடு கடத்துமாறு உத்தரவிட்டார்.

எனினும் சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தமக்கு இந்த தீர்ப்பில் திருப்தியில்லை என்றும் இத்தீர்ப்பை உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வானொலி வெடித்துச் சிதறியதில் 13 வயதுச் சிறுவன் படுகாயம்

வானொலிப் பெட்டியொன்று வெடித்ததில், 13 வயது சிறுவனொருவன் படுகாயமடைந்து, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான் என்று, அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மாலபே, பிட்டுக்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு முன்பாக, கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் வானொலிப் பெட்டியை வீட்டுக்கு எடுத்துச் சென்று, அந்த வானொலிப் பெட்டிக்கு மின்சாரத்தை கொடுப்பதற்கு முயன்ற போதே, இவ்வனர்த்தம் இடம் பெற்றுள்ளதாக, மேலதிக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று, அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, "பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி பயிலும், மேற்படி சிறுவன், பாடசாலை விடுமுறையைக் கழிப்பதற்காக, மாலபேயிலுள்ள தன்னுடைய பாட்டியின் வீட்டுக்கு வந்துள்ளார்.

இந்நிலையில், பிட்டுகல பிரதேசத்தில் உள்ள காற்றுச் சீரமைப்பிகள் பழுதுபார்க்கும் நிறுவனத்துக்கு முன்பாக, மிகவும் அழகாகப் பொதியிடப்பட்ட பொதியொன்று கிடந்துள்ளது. அந்தப் பொதியை வீட்டுக்கு எடுத்துசென்ற அந்த சிறுவன், அதனை பிரித்துப் பார்த்தபோது, அது ஒரு வானொலிப் பெட்டி எனத் தெரியவந்துள்ளது.

அந்த வானொலிப் பெட்டியை இயக்குவதற்காக, அதற்கு மின்சாரத்தை கொடுத்த போதே, அப்பெட்டி வெடித்துச் சிதறியுள்ளது என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில், சிறுவனின் இரண்டு கைகள், நெஞ்சுப்பகுதி மற்றும் பாதங்களில் எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளன. இதேவேளை, வெடித்து சிதறிய அந்த வீட்டின் அறையில், மேசை உள்ளிட்ட ஏனைய பொருட்களுக்கும், அறையின் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் சுவர்களுக்கும் கடுமையான சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெடித்துச் சிதறியதை அவதானிக்கின்ற போது, மின்சார இணைப்பை ஏற்படுத்திய உடனேயே வெடிக்கும் வகையில், இரும்பு தகடுகளை கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இரும்பு தகடுகளைக் கொண்டு, வானொலிப் பெட்டியை போலவே, இந்த மர்மப் பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது என்று சந்தேகம் கொள்வதாக தெரிவித்த பொலிஸார், இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் விசேட பகுப்பாய்வாளர்களைக்கொண்டு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)




# மன்னனை வென்ற புத்திசாலிப் புலவன்

ஒரு மன்னனுக்கு கவிதை என்றால் மிகவும் பிடிக்கும். ஒரு நாள் மிகவும் சந்தோஷமாக இருக்கையில் "பொருள் புதிது, சுவை புதிது, சோதி மிக்க நவ (புது) கவிதை" எழுதி வரும் புலவனுக்கு ஆயிரம் பொற்காசுகள் என்று அறிவித்தார். அவருடைய அரசவையில் ஏழு புலவர்கள் இருந்தனர். அவர்களுக்கு அபார நினைவாற்றல் உண்டு. யாரோ ஒரு புலவன் ஒரே கவிதை மட்டும் எழுதி இவ்வளவு காசு பெறுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. சொல்லப் போனால் பொறாமைதான்.

ஏழு பேரும் கூடி திட்டம் வகுத்தனர். அவர்களில் ஒருவர் ஏகாக்ரஹி. அதாவது எதையாவது ஒரு முறை கேட்டால் போதும், அதை அப்படியே சொல்லும் அபூர்வ நினைவாற்றல் உடையவர். மற்றவர் இரண்டு முறை கேட்டால் சொல்லி விடுவார். இப்படியே ஒருவர், மூன்று முறை கேட்டால் இன்னொருவர் 4 முறை கேட்டால் திருப்பிச் சொல்லும் ஆற்றல் இருந்தது.

ஒவ்வொரு புலவரும் புதுக் கவிதை எழுதி வாசித்த போதெல்லாம், ஏகாக்ரஹி எழுந்து இது புதுக் கவிதை அல்லவே, எனக்கு



முன்னமே தெரியும், இதோ சொல்கிறேன் என்று சொல்லிவிடுவார்! இப்படியே இரண்டாமவர் எழுந்து, ஆமாம் முதல் புலவர் சொன்னது முற்றிலும் உண்மை எனக்கும் தெரியும் என்று சொல்லி அவரும் ஒப்பித்து விடுவார். அதற்கு மேல் மூன்றாவது புலவருக்கு வேலையே இருக்காது. வந்த புலவர் குழம்பிப் போய் வெளியே போய்விடுவார். அவைப் புலவர்களின் அபூர்வ நினைவாற்றலால் இதைச் சாதிக்க முடிந்தது.

இப்படி ஒவ்வொரு புலவரின் புதுக் கவிதையும் பரிசு பெறாமல் போனதுடன் புலவர்களுக்கு எல்லாம் தலையில் குழப்பம், கிறுக்கே பிடித்துவிடும் போல இருந்தது. அந்த ஊரில் இருந்த ஒரு புத்திசாலிப் புலவனுக்கு ராஜ சபையில் இருந்த புலவர்களின் திருட்டுத்தனம் புரிந்தது. அவர் கள்ளனுக்கும் குள்ளன்! அவைப் புலவர்கள் எட்டு அடி பாய்ந்தால் இவர் 16-அடி பாயும் புலமைப் புலி. ஒரு அருமையான கவியுடன் அவைக்குச் சென்றார்.

மன்னர் வழக்கம் போல ஏழு அவைப் புலவர் புடை சூழ கவிதையை ரசிக்கத் தயாரானார்.' மன்னாதி மன்னா! உன்னப்பன் என்னப்பனிடம் கடன் வாங்கிய பத்தாயிரம் பொற்காசுகளை இன்னும் தராமல் காலம் கழிப்பது ஏனோ? இது நீதியா? நியாயமா? தருமமா? என்று பொருள் தொனிக்கும் கவிதையைப் பொழிந்தார். மன்னருக்கு ஒரே ஆத்திரம். நிறுத்துங்கள், புலவரே. அப்படி என்னப்பன் கடன் வாங்கி இருந்தால் இந்தப் புலவர்களுக்குத் தெரியாமல் இராது. இவர்கள் என்னப்பன் ராஜாவாக இருந்த காலத்தில் இருந்து அவைப் புலவர்களாக் இருக்கின்றனர் என்றான் மன்னன்.

வழக்கமாக வந்த புலவரின் புதுக் கவிதைகளை மனனம் செய்தும் அவைப் புலவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். திருட்டு முழி முழித்தனர். உண்மை என்று சொல்லி புதுக் கவிதையை மீண்டும் சொல்ல முடியவில்லை! சொன்னால் தலை போய்விடும். புதுக் கவிதை வாசித்த புலவருக்கு ஒரே மகிழ்ச்சி. மன்னா! நான் புதுக் கவிதைக்காக அப்படிச் சொன்னேன். உன் தந்தை உன்னைவிட கொடையாளி. அவன் கை "கொடுத்தே அறியும், வாங்கி அறியாது" என்றவுடன் மன்னனுக்கு மகிழ்ச்சி. பன்மடங்கு கூடுதலாகப் பரிசு வழங்கி புலவரை அனுப்பிவைத்தான். அவைப் புலவர்களின் கொட்டம் ஒடுங்கியது.

நினைவாற்றல் பாராட்டத் தக்கதே, அதைத் தீய வழியில் பயன்படுதினால் ஆய்ந்தவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பொறுப்பரோ? பொறார்!!




- 1886 - தென் கரோலினாவில் சார்ல்ஸ்டன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 100 பேர் கொல்லப்பட்டனர்.
- 1897 - தொமஸ் எடிசன் முதலாவது திரைப்படம் காட்டும் கருவியான கினெட்டஸ்கோப்புக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1920 - போலந்தில் கமரோவ் என்ற இடத்தில் சோவியத் போல்ஷெவிக்குகளுடன் இடம்பெற்ற போரில் போலந்து வெற்றி பெற்றது.
- 1957 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.
- 1962 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.
- 1968 - கார்ஃபீல்ட் சோபர்ஸ் கிரிக்கெட் போட்டியொன்றில் ஒரு ஓவரில் 6 ஆறு ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார்.
- 1978 - இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.
- 1986 - கலிபோர்னியாவில் இரு விமானங்கள் வானில் மோதிக்கொண்டதில் 67 பேர் வானிலும் 15 பேர் தரையிலும் கொல்லப்பட்டனர்.
- 1986 - சோவியத் பயணிகள் கப்பல் "அட்மிரல் நக்கிமொவ்" கருங்கடலில் மூழ்கியதில் 423 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - வட கொரியா தனது முதலாவது செய்மதியை ஏவியது.
- 1999 - புவெனஸ் ஐரிசில் பயணிகள் விமானம் ஒன்று விமான நிலையத்தில் இருந்து புறப்படுகையில் விபத்துக்குள்ளாகியதில் 65 பேர் கொல்லப்பட்டனர்.
- 2005 - பக்தாத்தில் அல் ஆயிம்மா பாலத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 1,199 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை நடிகர் சரத் குமார் ஆரம்பித்தார்.

பிறப்புகள்

- 1569 - ஜஹாங்கீர், முகலாயப் பேரரசர்.(இ. 1627)
- 1870 - மரியா மாண்ட்டிசோரி, இத்தாலியக் கல்வியாளர், மருத்துவர் . (இ. 1952)
- 1905 - எஸ். ஆறுமுகம், ஈழத்துப் பொறியியலாளர், எழுத்தாளர் . (இ. 2000)
- 1907 - ரமன் மக்சேசே, பிலிப்பீன்சின் 7வது அரசுத்தலைவர் . (இ. 1957)
- 1919 - அம்ரிதா பிரீதம், இந்தியக் கவிஞர் (இ. 2005)
- 1944 - கிளைவ் லொயிட், கயானா துடுப்பாட்ட வீரர்.
- 1947 - சொம்சாய் வொங்சவாட், தாய்லாந்தின் 26வது அரசுத்தலைவர்.
- 1949 - ரிச்சர்ட் கியர், அமெரிக்க நடிகர், தயாரிப்பாளர்.
- 1955 - லாலுபாய் பட்டேல், இந்திய அரசியல்வாதி.
- 1956 - சாய் இங்-வென், சீனக் குடியரசின் அரசியல்வாதி.
- 1963 - ரிதுபர்னோ கோஷ், இந்திய நடிகர், இயக்குநர் . (இ. 2013)
- 1969 - ஜவகல் ஸ்ரீநாத், இந்தியத் துடுப்பாட்ட வீரர்
- 1970 - யோர்தானின் ரானியா அல்-அப்துல்லா
- 1970 - ஸாக் வார்ட், கனடிய நடிகர், தயாரிப்பாளர்
- 1977 - ஜெஃப் ஹார்டி, அமெரிக்க மற்போர் வீரர், பாடகர்.
- 1979 - யுவன் சங்கர் ராஜா, இந்திய இசையமைப்பாளர், பாடகர்.

இறப்புகள்

- 1814 - ஆர்தர் பிலிப், நியூ சவுத் வேல்சின் முதலாவது ஆளுநர். (பி. 1738)
- 1950 - சு. சி. பிள்ளை, இந்தியக் கணிதவியலாளர். (பி. 1901)
- 1963 - ஜோர்ஜெஸ் பிராக், பிரான்சிய ஓவியர், சிற்பி . (பி. 1882)
- 1973 - ஜான் போர்டு, அமெரிக்க நடிகர், இயக்குநர் . (பி. 1894)
- 1989 - புதுவை சிவம், புதுவை எழுத்தாளர், கவிஞர், இதழாளர் . (பி. 1908)
- 1995 - பியாண்ட் சிங், பஞ்சாபின் முன்னாள் முதலமைச்சர். (பி. 1922)
- 1997 - டயானா, வேல்ஸ் இளவரசி . (பி. 1961)
- 2000 - கே. கே. பாலகிருஷ்ணன், கேரள அரசியல்வாதி . (பி. 1927)
- 2009 - வை. அநவரத விநாயகமூர்த்தி, ஈழத்து எழுத்தாளர், ஊடகவியலாளர் . (பி. 1923)
- 2012 - பிராங்க் பெ. மெக்டொனால்டு, அமெரிக்க வானியற்பியல் அறிஞர் . (பி. 1925)
- 2014 - பப்பு, இந்திய இயக்குநர் . (பி. 1933)

சிறப்பு நாள்

- விடுதலை நாள் . (கிர்கிசுத்தான் 1991)
- விடுதலை நாள் . (மலாயா, 1957)
- விடுதலை நாள் . (திரினிடாட் மற்றும் டொபாகோ 1962)
- தேசிய மொழி நாள் . (மல்தோவா)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 140 | 160 | 130 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 400 | 320 |
| தக்காளி | 160 | 200 | 140 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 100 | 200 | 180 | 160 | 160 |
| பூசணி | 50 | 400 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 100 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 200 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 150 | 300 | 160 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 40 | 120 | 60 | 200 | 70 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 50 | 40 | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | 80 | 120 | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 60 | 30 |
| கறிமிளகாய் | 120 | 200 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 20 | 50 | 60 | 80 |
| போஞ்சி | 180 | 200 | 160 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 120 | 160 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 250 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | — | 280 | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | 160 | 250 |
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 40 | 50 | 60 | 60 |

தரை மேல் பிறக்க வைத்தான்.
எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்.
- கவிஞர் வாலி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வட மாகாணக் கல்வி அமைச்சருக்கு ஓர் அன்பு மடல்

வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கு அன்பு வணக்கம்.

எங்கள் வட மாகாணத்தின் கல்வி நிலை தொடர்பில் பலரும் கவலை கொண்டுள்ளனர்.

தேசிய கல்வி நிலையில் எங்கள் மாகாணம் பின்னடைவில் நிற்பதே அந்தக் கவலைக்குக் காரணமாகும்.

ஒரு காலத்தில் இந்த நாட்டின் கல்வியில் மிக உச்சமான நிலையில் இருந்த வட மாகாணம் இன்று பின்னடைவைச் சந்தித்துள்ளது.

இதற்கு காரணம் நம் மண்ணில் இடம் பெற்ற போர் என்பது மறுக்க முடியாத உண்மை.

சுமார் 30 வருடகால யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், உயிரிழப்புக்கள், சொத்தழிவுகள் என ஏகப்பட்ட துன்பங்கள் எங்கள் மக்களின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கிற்று.

இதனால் கல்வி மீதான அக்கறைகளும் கவனப்பாடுகளும் குறைந்து போனது என்பது நிதர்சனமான உண்மை.

இந்த உண்மைகளுக்கு மத்தியிலும் எங்கள் மாணவர்களின் கல்வி தொடர்பில் அனைவரும் அதீத கருசனை கொண்டு கல்வியில் சாதனை படைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

இது விடயத்தில் பலரும் கடும் முயற்சி செய்கின்றனர். இம் முயற்சி நிச்சயம் வெற்றி தரும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதேநேரம் கடந்த சில நாட்களுக்கு முன்னதாக ஆறு மாண்வர்கள் மண்டைதீவு - சிறுத்தீவுக் கடற்பரப்பில் உயிரிழந்த சம்பவம் அனைவரையும் உலுப்பியிருந்தது.

படித்துக் கொண்டிருந்த மாணவர்களுக்கு இக்கதி ஏற்பட்டதை எவராலும் ஜீரணிக்க முடியாது.

எனினும் இத்தகைய இழப்புக்கள் தொடர்பில் நாம் அதீத கவனம் செலுத்துவோமாயின் எங்கள் தமிழ் பிள்ளைகளில் பெரும்பாலானவர்களுக்கு நீச்சல் தெரியாது என்ற உண்மை புரியுவரும்.

ஒரு சில வருடங்களுக்கு முன்னரும் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தில் வவுனியாவைச் சேர்ந்த மாணவர் ஒருவர் உயிரிழந்து போனார்.

ஆழமான பகுதிக்குள் இறங்கிய அந்த மாணவனுக்கு நீச்சல் தெரிந்திருக்கவில்லை. இதனால் அந்த மாணவன் பரிதாபகரமாக உயிரிழக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு பல உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும்.

உலகம் முழுவதிலும் நீச்சல் என்பது ஒரு கட்டாயமான விடயமாக கருதப்படுகிறது.

இலங்கையில் தென்பகுதியில் அனைத்து மாணவர்களுக்கும் நீச்சல் தெரியும் என்ற நிலைமை உள்ளது.

தென்பகுதியில் உள்ள பிரபல்யமான கல்லூரிகள் நீச்சலை மாணவர்கள் கட்டாயம் கற்றிருந்திருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றன.

ஆனால் வட மாகாணத்தில் நீச்சல் என்பது கவனிக்கப்படாத விடயமாகவே உள்ளது.

எனவே இது விடயத்தில் ஓர் உறுதியான முடிவு எடுக்க வேண்டும். மாணவர்கள் அனைவரும் நீச்சல் கற்றுக் கொள்வதான நடைமுறைகளை அமுலாக்குவதன் மூலம் அனைவரும் நீச்சல் தெரிந்தவர்களாக ஆக்கப்படலாம்.

ஆகையால் பாடசாலை மாணவர்களுக்கு நீச்சல் பயிற்சியை வழங்கும் திட்டமொன்றை நிரந்தரமாக நடைமுறைப்படுத்த தாங்கள் நடவடிக்கை எடுப்பது எங்கள் மக்கள் சமூகத்துக்குச் பெரும் பணியாக இருக்கும்.

# பிரபாகரன் இருந்தால் மகிந்தவும் கோத்தபாயவும் மன்னிப்புக் கேட்க வேண்டிய நிலை வந்திருக்கும்

தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பற்ற விதத்தை பார்க்கும் போது, மகிந்தவும் கோத்தபாயவும் பிரபாகரனை வணங்கி மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டிய நிலை வந்திருக்கும் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் பிரேஸிலில் இருந்து இராணுவத் தலைமையகத்திற்கு மின்னஞ்சல் ஒன்று வந்துள்ளது.

இதில் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து தெளிவுபடுத்துமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த மின்னஞ்சலுகுகு பதில் அனுப்பும் போது, இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து இதுவரை எமக்கு தெரிவிக்கப்படவில்லை, எமது நாட்டில் இவ்வாறான யுத்த மீறல்கள் இடம்பெற வில்லை எனப் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

இது சரியான பதிலா? இவ்வாறு தெரிவிப்பதா? பதவியில் இருப்பவர்கள் இவ்வாறு பதில் கூறுவதா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், தற்போது பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால், மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பித்திருந்தால், நீதிமன்றத்தில் வைத்து மகிந்த ராஜபக்ஷவையும் கோத்தபாய ராஜபக்ஷவையும் பிரபாகரனை வணங்கி மன்னிப்பு கேட்குமாறு கூறியிருப்பார்கள் என எனக்கு நினைக்கத் தோன்றுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திருத்தங்களுடன் '20' ஐ ஏற்க கிழக்கு மாகாண சபை தயார்!

## முதலமைச்சர் நஸீர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் சிறுபான்மை மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் மேலும் சில திருத்தங்களுடன் கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படுமாயின் அதற்கு முழுமையான ஆதரவை வழங்க கிழக்கு மாகாண சபை தயாராகவுள்ளதாக முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் விடுதலைக்காக இந்த அரசாங்கம் செயற்படுமாயின் தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான நல்லாட்சியைக் கவிழ்ப்பதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு - கரடியனாறு பிரதேசத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சால் நிர்மாணிக்கப்பட்டுள்ள விவசாய சேவைக்காலப் பயிற்சி நிலையக் கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கிழக்கு முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மை இனங்களுக்கான உரிமை கிடைத்து விடக் கூடாது என்பதற்காகவும் இந்த நல்லாட்சியை சீர்குலைக்க வேண்டும் என்பதற்காகவும் முன்னாள் ஆட்சியாளர்களில் இனவாதிகளான பலர் கடுமையாக உழைத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆனால், இந்த நல்லாட்சி மூலமாகவே சிறுபான்மை மக்களுக்கு சிறந்ததொரு அரசியல் தீர்வு வேண்டும் என்பதற்காக சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றது.

1986ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு யுத்தத்தால் அழிக்கப்பட்ட இலங்கையின் 6ஆவது பெரிய பண்ணையாக விளங்கிய கரடியனாறு விவசாயப் பண்ணையை மீளக் கட்டியெழுப்ப தாம் 30 வருடங்கள் காத்திருக்க வேண்டியதாகிவிட்டது.

தொடர்ந்தும் ஜனாதிபதியினதும், பிரதமரினதும் ஒத்துழைப்பு இருக்குமாயின் எதிர்வரும் 5 வருடங்களுக்குள் சுமார் 50 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும் எனவும் முதலமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி பதவியேற்ற 30 மாத காலத்திற்குள் 18 தடவைகள் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருப்பது, ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தின் மீது கொண்டிருக்கும் அக்கறையைக் காட்டுவதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# சாஸ்திரங்கள்

✦ அதிக இடைவெறி விட்டு பூக்களைத் தொடுத்தல் கூடாது. இவ்வாறு தொடுத்த பூக்களை வாங்கி அணிவதும் கூடாது. இதனால் கணவன்- மனைவிக்கிடையே இடைவெளி அதிகரித்து சண்டை சச்சரவுகள் உண்டாகும்.

-அகத்திய முனிவர்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### இந்தப் பொருள் உங்கள் வீட்டில் இருந்தால் போதும்

சித்திரா பௌர்ணமி, ஆணி மாத வளர்பிறை அஷ்டமி, ஆடி மாத பூர நட்சத்திரம், புரட்டாசி மாத பௌர் ணமி போன்ற ஆன்மீக சிறப்பு நாட்களில் வலம்புரி சங் கில் பால் வைத்து மகாலட்சுமிக்கு பூஜை செய்து வந்தால் கணவன் - மனைவி நல்ல ஆயுளுடன் இருப்பார்கள்.

தினமும் வலம்புரி சங்கில் நீர் மற்றும் துளசி போட்டு அதை தினமும் குடித்து வந்தால் ஆரோக்கியம் சிறக்கும்.

பஞ்சமி திதி நாளில் வலம்புரி சங்கில் தூய்மையான பசும்பால் ஊற்றி பூஜை செய்து வந்தால் குழந்தை இல் லாத கணவன் - மனைவிக்கு புத்திர பாக்கியம் கிட்டும்.

உங்கள் வீட்டில் வலம்புரி சங்கை வைத்து பூஜித்து வந்தால், பில்லி, சூனியம், செய்வினை போன்றவற்றின் தாக்கம் அண்டாது. (முற்றும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அர்ப்பணமும் பொறுப்பும்

உன் காரின் எரிபொருள் தீர்ந்துவிட்டால் நீ மறுபடியும் அதனை நிரப்புவாய்.

அதேபோல் உன்னுடைய அர்ப்பணமும் பொறுப்பும் காலப்போக்கில் குறையும், அவற்றையும் இடைவிடாமல் மறுபடியும் நிரப்ப வேண்டியது தேவை!

பெரும்பாலும் மக்கள் அர்ப்பணம் செய்துவிட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள். அப்போது மனம் உரிமை கோர அல்லது குற்றஞ்சாட்ட ஆரம்பிக்கிறது. உன்னுடைய அர்ப்பணம் முழுமையாக இல்லாத போது அது முனகவும் குறை கூறவும் வழிகோலுகிறது.

முழுமையான அர்ப்பணம் உனக்குப் பெரும் உற்சாகம், ஆர்வம், நம்பிக்கை, சவாலைச் சமாளிக்கும் திறமை ஆகியவற்றைக் கெடுக்கும்- நான் என்ற ஆணவத்திற்கு இடம் கொடுக்காது.




### பிறருக்கு நல்வழி காட்டுக

✦ மனிதர்கள் செய்த உதவியைச் சிந்திப்பதை விட இறைவன் செய்த உதவியை சிந்தனை செய்யுங்கள்.

✦ மற்றவர்களின் குற்றங்களை நோட்டமிடுவதை விட உங்களின் குற்றங்களை நோட்டமிடுங்கள்.

✦ உப்பை நீர் கரைப்பது போன்று நற்குணம் உங்கள் பாவங்களை கரைத்துவிடும். கள்ளின் மண்டி தேனைக் கெடுத்து விடுவது போன்று துர்க்குணம் வணக்கங்களைக் கெடுத்துவிடும்.

✦ உன் வாயிலாக, இறைவன் ஒரு மனிதனுக்கு நேர்வழி காட்டுவது இவ்வுலகத்தையும் இதிலுள்ள யாவற்றையும் விட உனக்கு நன்மை பயப்பதாகும்.

✦ எவர் அண்டை வீட்டாரைத் துன்புறுத்துகின்றாரோ அவர் என்னைத் துன்புறுத்தியவராவார்.

✦ தர்மம் செய்ய இயலாதவன் ஒரு நற்செயல் செய்வானாக அல்லது ஒரு கெட்ட செயலில் இருந்து விலகிக் கொள்வானாக. அதுவே அவனது ஈகை.

✦ உங்களை நம்பி ஒருவன் ஒரு செய்தியைச் சொன்னால், அதை அடைக்கலப் பொருள் போல பாதுகாத்து வையுங்கள். -நபிகள் நாயகம்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்திலை கரம்பன், மெலிஞ்சிமுனை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

(இ-9)

# இமையாணன் மத்திய வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட அரையிறுதி இன்று

## கலைமதி-மனோகரா பலப்பரீட்சை



இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற 35 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குஇமையாணன்மத்தியவிளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டம்

# வதிரி டைமன்ஸ் - கரவெட்டி செயலகம்





## இன்று மோதல்

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற 35 வயதிற்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் டைமன்ஸ் அணியை எதிர்த்து கரவெட்டி செயலக அணி மோதவுள்ளது. (க)

# உதயசூரியன் கழகத் துடுப்பாட்ட முடிவுகள்



வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

27.08.2017 அன்று இடம்பெற்ற முதலாவது போட்டியில் ஆழியவளை அருணோதய வி.க மற்றும் கொடுக்கிளாய் சக்திவேல் வி.க. ஆகியன மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய சக்திவேல் விளையாட்டுக்கழகம் 140 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர். 141 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அருணோதயா வி.கழகம் 43 ஓட்டங்களை மாத்திரமே பெற்று கொண்டது. இதனால் சக்திவேல் வி.க. 97 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டியில் ஆட்ட நாயகனாக சக்திவேல் வி.க வீரர் றஜித் தெரிவு செய்யப்பட்டர்.

இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் கேவில் வெள்ளிநிலா வி.க. மற்றும் கட்டைகாடு சென்மேரிஸ் வி.க ஆகியன மோதின. இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய சென்மேரிஸ் அணி 75 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வெள்ளிநிலா விளையாட்டு கழகம் குறித்த இலக்கை அடைந்து வெற்றியை தம தாக்கி கொண்டது. இப் போட்டியில் சிறப்பாக செயற் பட்ட றஞ்சித் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இடம்பெற்ற மூன்றாவது போட்டியில் நாகர்கோவில் வெண்மதி வி.க மற்றும் கணேசானந்தா வி.க ஆகியன மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வெண்மதி வி.க 194 ஓட்டங்களை பெற்று கொண்டது. அணி சார்பாக மைந்தன் 41 ஓட்டங்கள், தீசன் 35 ஓட்டங்களையும் பெற்று கொடுத்தனர்.

195 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய கணேசானந்தா வி.க 49 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொடுத்து 145 ஓட் டங்களால் வெற்றியை தம தாக்கி கொண்டது. இப்போட் டியில் சிறப்பாக விளையாடிய மைந்தன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

நான்காவதாக இடம்பெற்ற போட்டியில் அம்பன் பிங்பொங் வி.க. மற்றும் தாளையடி சென் அன்ரனிஸ் வி.க ஆகியன மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பிங்பொங் வி.க 147 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அணி சார்பாக சயந்தன் 32 ஓட்டங்கள், புஸ்பன் 26 ஓட்டங்கள், தேவா 20 ஓட்டங்களை பெற்று கொடுத்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்து ஆடிய சென்அன்ரனிஸ் வி.க. 103 ஓட்டங்களை பெற்றுக் கொண்டு 43 ஓட்டங்களால் தோல்வியை அடைந்தது. இப் போட்டியில் சிறப்பாக செயற்பட்ட மனோ ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

ஐந்தாவதாக இடம் பெற்ற போட்டியில் அம்பன் பிங்பொங் வி.க மற்றும் நாகர்கோவில் வெண்மதி வி.க ஆகியன மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நாகர்கோவில் வெண்மதி வி.க 60 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அணி சார்பாக சஞ்சு 25 ஓட்டங்கள், கோகுலன் 16 ஓட்டங்கள், கவி 10 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்து ஆடிய அம்பன் பிங்பொங் வி.க. குறித்த இலக்கினை அடைந்து இப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

இப் போட்டியில் சிறப்பாக செயற்பட்ட சயந்தன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

28.08.2017 அன்று இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கணேசானந்தா வி.க மற்றும் செல்வாவி.க ஆகியன மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கணேசானந்தா வி.க 12 ஓவர்களில் 77 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணி சார்பாக அயந்தன் 37 ஓட்டங்களைப் பெற்று கொடுத்தார். 78 என்ற வெற்றி இலக்குடன் துடுப் பெடுத்து ஆடிய செல்வா வி.க 12 ஓவர்களில் 9 இலக்கினை இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற்று கொடுத்து 19 ஓட்டங்களால் தோல்வி அடை ந்தது.

இப் போட்டியில் 04 இலக்கினை அயந்தன் கைப்பற்றி இருந்தார். இப் போட்டியில் சிறப்பாக செயற்பட்ட அயந்தன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)

# வளர்மதியின் கரப்பந்தாட்டம்

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தத் திட்டமிடப்பட்ட "ஏ" பிரிவு, "பி" பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை குறித்த கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தொடரில் "ஏ" பிரிவில் 10 அணிகளும் "பி" பிரிவில் 15 அணிகளும் என மொத்தமாக 25 அணிகள் விளையாடவுள்ளன. (க)



பிரபல சமூக சேவையாளர் தங்க வேலாயுதம் ஜெங்கரனின் நிதியுதவியுடன் கரவெட்டி பிரதேச செயலக அணிக்கு புதிய சீருடை வழங்கப்பட்டுள்ளது.

## அலிஸ் வெல்ஸ்...

தேசிய கூட்டமைப்பை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமாகி இடம்பெறுகின்ற இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக அலிஸ் வெல்ஸ் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வந்துள்ளார். மாநாட்டில் மட்டு மல்லாது பல்வேறு சந்திப்புகளிலும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

அந்த வகையில் காணாமல்போனோர்கள் தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தையும் பார்வையிட்டார்.

இந்நிலையில், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பை சந்தித்து கலந்துரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## புகையிரத சில்லுக்குள்...

தாபமாக உயிரிழந்துள்ளார்.

அரியாலை மேற்கு ஆசீர்வாதப்பர் வீதியை சேர்ந்த ராமு அருள்நேசன் (வயது 64) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் தனது குடும்பத்தினருடன் நேற்றைய தினம் அதிகாலை கொழும்பில் இருந்து யாழ் நோக்கி வரும் புகையிரதத்தில் வந்துள்ளார்.

அரியாலை புங்கங்குளம் புகையிரத தரிப்பிடத்தில் புகையிரதம் நிறுத்தும் போது குறித்த நபர் கீழே இறங்குவதற்கு முற்பட்டுள்ளார். இவர் இரண்டு தோள்களிலும் இரண்டு பயண பைகளை அணிந்திருந்தவாறே கீழே இறங்க முற்பட்டுள்ளார்.

அப்போது ஒரு பை புகையிரதத்தின் கைபிடியினில் சிக்குண்ட அதேவேளை, மற்றைய தோளில் இருந்த கனதியான பை தண்டவாளத்துக்கும் தரிப்பி மேடைக்கும் இடையே விழுந்துள்ளது. இதன்போது அவரும் நிலைதடுமாறி அந்த பையுடன் சேர்ந்து தண்டவாளத்தில் விழுந்துள்ளார். அப்போது புகையிரதத்தின் சில் அவருடைய நெஞ்சுப் பகுதியில் ஏறியதால் குறித்த நபர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்பு தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனர வைத்திசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்த நிலையில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-4.9.30)

## சர்வதேச நீதிமன்ற...

புதிய நீதியமைச்சராக நேற்றைய தினம் பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர இதனைக் கூறியுள்ளார்.

மேலும், இலங்கையில் மின்சார நாற்காலி சித்திரவதைகள் நடைபெற்றன என்ற குற்றச்சாட்டை முற்றாக மறுக்கின்றோம் எனக் குறிப்பிட்ட அவர் இராணுவத்தினரை காப்பாற்றுவது அரசியல் இலாபங்களுக்காக அல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அம்பாந்தோட்டை விடயத்தில் முறைகேடாக நடந்து கொண்டமை நிரூபிக்கப்பட்டுள்ளது என கடந்த காலத்தில் நடைபெற்ற குற்றச் செயல்கள் முறையாக விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அத்துகோரள குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இந்.மீனவர்கள்...

மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகத்தை சேர்ந்த 8 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயணம் செய்த 2 படகுகளையும் இலங்கை கடற்படை நேற்று அதிகாலை கைப்பற்றியிருந்தனர்.

எனினும் ஒரு படகு மற்றும் 4 மீனவர்கள் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். ஏனைய 4 பேரும் ஒரு படகும் கடற்படை வசம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

## சீனியின் விலை...

சீனி விலை அதிகரிப்பிற்கு முன்னர் அதன கொள்வனவு விலை 100 ரூபாயாகக் காணப்பட்டது.

உலக சந்தையில் சீனியின் விலை குறைந்த சந்தர்ப்பத்தில் 8 வீத வர்த்தக வரி விதிக்கப்பட்டிருந்தது.

இந்த வர்த்தக வரி அதிகரிப்பினால், இலங்கையில் சீனியின் விலையை அதிகரிக்கக்கூடாது என சீனி இறக்குமதியாளர்களிடம் வாழ்க்கைச் செலவுக்குழு கோரியிருந்தது.

இதனடிப்படையில் இந்த விடயம் தொடர்பில சீனி இறக்குமதி சங்கத்திடம் கேட்டபோது, சீனியின் மொத்த விலை மாத்திரமே அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (செ-11)

## இந்திய பெருங்கடல்...

கில் 35 நாடுகளைச் சேர்ந்த 150இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். (செ-11)

## போர்க் குற்றச்சாட்டு...

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய அவர், சர்வதேச ரீதியாக நாட்டிற்கு இருந்த அழுத்தங்கள் குறைவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் எவையும் இன்று எமக்கெதிராக பிரயோகிக்கப்படுவதில்லை. இன்று எவரும் இராணுவத்தை தண்டிப்பதாக கூறுவதுமில்லை, மின்சாரக் கதிரை கதைகளை கூறுவதும் இல்லை. சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டுவதும் இல்லை. ஏனெனில் இந்த ஆட்சியில் நாம் ஜனநாயக ரீதியில் செயற்படுவது இன்று சர்வதேச நாடுகளுக்கு தெரிந்துள்ளது. கடந்த காலத்தில் இருந்த அடக்குமுறைகள், இராணுவ ஆக்கிரமிப்பு எவையும் இன்று இல்லை. எனினும் ஒரு சில சிவில் அமைப்புகளும் அரச சார்பற்ற அமைப்புகளும் தனி நபர்களும் தொடர்ந்தும் சில யுத்த குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். முன்னாள் இராணுவ தளபதி ஜெகத் ஜயசூரிய குறித்தும் இப்போது மீண்டும் சர்ச்சைகள் எழுந்துள்ளன. ஆனால் இவை தொடர்பில் நாம் பொருட்படுத்தவில்லை. இவ்வாறான அமைப்புகள், தனி நபர்கள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக இவ்வாறான முரண்பாட்டுக் கருத்துக்களை முன்வைத்து வருவார்கள். அதற்கு நாம் பொறுப்புக் கூறவேண்டிய அவசியம் இல்லை. ஐக்கிய நாடுகள் சபை எமது நிலைப்பாட்டை விளங்கிக் கொண்டுள்ளது. அவர்கள் முன்னிலையில் நாம் தெரிவித்த கருத்துக்களை ஏற்றுக்கொண்டு எமக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபை செயற்பட்டு வருகின்றது. அத்துடன் தீவிரவாதம் நிறைவுக்கு வந்தாலும் யுத்த குற்றங்கள் தொடர்பில் கருத்துக்களை தவிர்க்க முடியாது. யுத்த குற்றங்கள் என்ற கருத்துக்களை சிவில் அமைப்புகள் முன்வைத்து வருவதை தவிர்க்கவும் முடியாது. அதற்கான நாம் அவர்களுக்கு பதில் கூறவேண்டிய அவசியமும் இல்லை. மேலும் இந்த அரசாங்கத்தின் ஆட்சியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. எமக்கு எதிரான சர்வதேச அழுத்தங்கள் குறைந்துள்ளதைப் போலவே எமக்கு எதிரான சர்வதேச தடைகளும் நீக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (செ-11)

## முன்னாள் போராளி...

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துரைத்த மேல் மாகாண மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்ட முக்கிஸ்தர்களான உருத்ரகுமார் அமெரிக்காவில் இருக்கின்றார். அதேபோல் அடெல் பாலசிங்கம் பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ளார். பிரான்சில் விநாயகம் இருக்கின்றார். நோர்வேயில் நெடியவன் இருக்கின்றார். ஆகவே எமக்கு இவ்வாறு நெருக்கடியை கொடுத்து எமது இராணுவத்தை கைது செய்ய நடவடிக்கை எடுப்பார்களாயின். இஸ்ரேலைப் போன்று எமது அரசாங்கமும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு எதிராக சர்வதேச சட்டம் செயற்படுத்தப்பட வேண்டும். அதனைவிட 12,000 முன்னாள் புலி உறுப்பினர்களை முன்னாள் ஜனாதிபதி விடுதலை செய்தார். இவ்வாறு எமது இராணுவத்திற்கு எதிராக சதிகள் அரங்ககேற்றேப்படுமாயின் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராகவும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆகவே நாட்டு இராணுவத்திற்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த பழிவாங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் முன்னாள் புலி உறுப்பினர்களும் தண்டிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் உருவாகும்.

மேலும் முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரியவிற்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த விடயம் தொடர்பில் பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் தலையிட வேண்டும். அவர் வன்னியின் கட்டளைத் தளபதியாக தனது கடமையையே நிறைவுசெய்தார். அது அவரது தனிப்பட்ட தேவையல்ல. ஆகவே தனது பணியாளர் ஒருவர் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். இந்த நாட்டில் இருந்த தீவிரவாதத்தை சட்டத்திற்கு உட்பட்டு எமது இராணுவம் இல்லாதொழித்தது. ஆகவே ஜெகத் ஜயசூரியவின் பணிகளும் சட்டத்திற்கு உட்பட்டே இருந்தன. அவர் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்காகவே செயற்பட்டார். ஆகவே அவருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக அரசாங்கம் தலையிட வேண்டும் எனவும் அமைச்சர் பாட்டலி சம்பிக்க குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இன்றும் நாளையும்...

தறை மாவட்டத்திலும் 100 மில்லி மீற்றர் வரை மழை பெய்யக் கூடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய வடக்கு கிழக்கு உள்ளிட்ட பிரதேசங்களில் 75 மில்லி மீற்றர் வரையில் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக கடும் காற்று வீசக்கூடும். அத்துடன் மின்னலினால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கப்புட்டுள்ளது. (செ-11)

# ப்ளூவேல் விளையாட்டு

## சிறுமி கைது

(ரஷ்யா)

உலகளாவிய ரீதியில் 130க்கும் மேற்பட்டவர்களை பலியெடுத்த ப்ளூ வேல் விளையாட்டில் பின்னணியிலிருந்ததாக சந்தேகிக்கப்படும் சிறுமி ஒருவரை ரஷ்ய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

17 வயதான சிறுமி ஒருவரையே இவ்வாறு கைது செய்துள்ளதாகவும், அத்துடன் மொஸ்கோ அருகே வைத்து இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாகவும் அந்நாட்டு பொலிஸார் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிறுமியும் ஆரம்பத்தில் ப்ளுவேல் விளையாட்டில் ஈடுபட்டவர் எனவும், எனினும், இறுதிக் கட்ட சவாலை தேர்ந்தெடுக்க தவறியவர் எனவும் அந்நாட்டு அரச புலனாய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து ஏனையவர்களை தற்கொலைக்கு தூண்டும் நிர்வாகியாக செயல்படும் பணியை குறித்த சிறுமி தெரிவு செய்துள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த சிறுமியின் கட்டளைக்கு கீழ்படியாவிட்டால் உறவினர்க ளையே அல்லது நெருக்கமானவர்களையே கொன்று விடுவதாக ப்ளுவேல் விளையாட்டை விளையாடி வந்தவர்களுக்கு மிரட்டல் கொடுத்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (செ-11)

# எத்தகைய சவால்கள் வந்தாலும் மக்களை பட்டினியாக விடேன்!

## பொருளாதார சபை 12ஆம் திகதி கூடும்–ஜனாதிபதி

நாட்டின் தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக அண்மையில் நியமித்த தேசிய பொருளாதார சபை எதிர்வரும் 12ஆம் திகதி முதன் முறையாகக் கூடவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்துள்ளார்.

நாட்டின் விவசாய மற்றும் கைத்தொழில் துறையில் விரிவான மாற்றங்களைக் கொண்டு வரும் நோக்கில் இந்த செயற்றிட்டத்தை ஆரம்பித்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முற்பகல் மட்டக்களப்பு கரடியனாறு விவசாய சேவைகள் பயிற்சி நிலையத்தைத் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி என்பன இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாக ஜனாதிபதி கூறினார்.

நாட்டு மக்களின் பொருளாதாரத்தையும் தேசிய பொருளாதாரத்தையும் பலப்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடியும் என தாம் நம்புவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வரட்சியான காலநிலை நீங்கி எதிர்வரும் மாதங்களில் கிடைக்கவிருக்கும் மழை காலத்துடன் விவசாய அபிவிருத்திக்கு முழு நாடும தயாராக வேண்டும் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

ஒக்டோபர் முதல் வாரத்தை தேசிய விவசாயிகள் வாரமாக பிரகடனப்படுத்துவதுடன், முழு நாடும் ஒன்றிணைந்த விரிவான விவசாய நிகழ்ச்சித்திட்டத்தை அவ்வாரத்தில் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த செயற்றிட்டத்திற்கு அனைத்து அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் ஒன்றிணைய வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்த விவசாய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எட்டு இலட்சம் ஹெக்டெயார் வயல் நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதுடன், இதற்குத் தேவையான 40 இலட்சம் புசல் விதை நெல்லை விவசாய சமூகத்திற்குப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிலும் நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவித்து அவர்களது பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்திருப்பதாக குறிப்பிட்ட அவர், எத்தகைய சவால்கள் வந்தபோதும் நாட்டு மக்களை பட்டினி போடுவதற்கு தான் தயாரில்லை எனவும் வலியுறுத்தினார்.

கரடியனாறு பயிற்சி நிலையம் 1980ஆம் ஆண்டு விவசாயத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டதுடன், யுத்த நிலைமைகளின் காரணமாக 1986ஆம் ஆண்டு மூடப்பட்டது.

2016ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் ஐரோப்பிய சங்கத்தின் நிதி உதவியின் கீழ் 83 மில்லியன் ரூபா மற்றும் இலங்கை அரசாங்கத்தின் 20 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு, விவசாய தாபனத்தின் ஒத்துழைப்புடன் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகளின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல், நீர் மற்றும் மணவள முகாமைத்துவம், வர்த்தக விவசாயத்திற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல், நவீன தொழில்நுட்பத்தின் கீழ் விவசாயத்துறையை நவீனமயப்படுத்தல் மற்றும் சூழல் நட்புடைய முறைமையின் கீழ் நவீன பயிர்ச்செய்கை முறைமையை அபிவிருத்தி செய்தல் இதன் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# காரில் வந்து ஆடு திருட்டு

(கரணவாய்)

மேய்ச்சலுக்கு கட்டிவிடப்பட்டிருந்த நல்லின ஆட்டினை சொகுசுக் காரில் வந்தோர் கடத்திச் சென்றுள்ளனர். வடமராட்சி இமையாளன் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் சொகுசுக் கார் ஒன்று வந்து அப் பகுதியில் உள்ள வீதியில் திரும்பியுள்ளது. இதன போது திடீரென கீழே இறங்கி காரில் இருந்தோர் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த ஆட்டினை தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு தப்பியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஆட்டினை கடத்திச் சென்ற கார் தொடர்பிலான காட்சி அப்பகுதியல் உள்ள சீ.சீ.ரி.வீ கமராவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-60)

## குத்தகைக்கு

பருத்தித்துறையில் நகரின் மத்தியில் இயங்கும் பிரபல ஹோட்டல் குத்தகைக்கு விடப்படும். விபரங்களுக்கு நேரில் வரவும்.

தொடர்பு : 076 941 7056 (C-9471)

தற்போது தரம் 4, தரம் 3 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கான...

புலமைப் பரிசில் வகுப்புகளும் மாதிரிப் பரீட்சைகளும்

ஆசிரியர் : திரு.ம.விமலேஸ்வரன் (யா/சென் பெனடிக்ற் றோ.க.வித்தி) அவர்களால் ஆரம்பம்

02.09.2017 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி

- அடிப்படையில் இருந்து பாடத்திட்டத்திற்கு ஏற்ப பூரண விளக்கத்துடன் கற்பித்தல்.
- ஆரம்பக் கல்வி கணித பாடத்தில் கூடிய செயற்பாடுகள்.

தொடர்பு புதிய நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் T.P : 077 459 8440 (C-9479)


# இந்திய மீனவர்கள் 76 பேர்...

இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக இலங்கை கடற்படையினாரல் இந்த வருடம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 76 பேர் பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றால் நேற்றையதினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டதாக இந்த வருட ஆரம்பத்தில் இருந்து இந்த மாதம் வரையிலான காலப் பகுதியில் 80 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் பல் வேறு தினங்களில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 72 இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றிலும், காங்கேசன்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றிலும் ஆஜர் செய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

அதில் இவர்களில் 68 பேர் ஊர்காவற்றுறை நீதிமன்றினாலும் 8 பேர் பருத்தித்துறை நீதிமன்றுனாலும் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (செ-9)

# 20 மாவட்டங்களில்...

சேர்ந்த 8,49,752 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப் பட்டிருந்தன.

இந்த எண்ணிக்கை தற்போது 20 மாவட்டங்களைசேர்ந்த 5,22,790 குடும்பங்களை கொண்ட 18,09,549-ஆக அதிகரித்துள்ளது.

மாவட்ட ரீதியாக வெளியிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் மொனறாகல மாவட்டத்திலே அதிக எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதாவது 1,10,140 குடும்பங்களை சேர்ந்த 4,08,083 பேர் என பேரிடர் முகாமைத்துவ அமைச்சகம் கூறுகின்றது.

மொனறாகலை மாவட்டத்தில் கூடுதலானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டாலும் வட மேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்கள்தான் கடும் பாதிப்புக் குள்ளாகியிருப்பதாக பேரிடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டம் - 78,026 குடும்பங்களை கொண்ட 2,56,542 பேர். புத்தளம் மாவட்டம் - 68,786 குடும்பங்களைசேர்ந்த 2,18,000 பேர் இம்மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் 1,57,567 குடும்பங்களை கொண்ட 5,84,666 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பேரிடர் முகாமைத்துவமையத்தினால் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களிலும் 40,154 குடும்பங்களை கொண்ட 1,34,978 பேர் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் அதில் அறிக்கையிடப் பட்டுள்ளன.

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களை பொறுத்தவரை அநேகமான இடங்களில் தண்ணீர் தட்டுப்பாடு அந்த பகுதி மக்களால் எதிர் கொள்ளப்படும் முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

பற்றாக்குறை நிலவும் பகுதிகளுக்கு நீர் வழங்கல் வாரியம் மற்றும் உள்ளுராட்சி சபைகள் மூலம் குடி நீர் விநியோகம் நடைபெற்று வந்தாலும் அது மக்களின் தேவைகளுக்கு போதுமானதாக இல்லை என கூறப்படுகின்றது.

இதேவேளை வரட்சி காரணமாக கால்நடைகளும் வனவிலங்குகளும் நீர் தேடி அலைகின்றன. நீர் இன்றி செத்து மடிந்துள்ளதாக தகவல்களும் வெளியாகியுள்ளன. (செ-11)

# இரு எறிகணை...

ஏ - 9 வீதியில் உள்ள பளை பிரதேச வைத்தியசாலையின் பின்புறமாக உள்ள பற்றைக் காட்டில் வெடிக்காத நிலையில் அதி சக்தி வாய்ந்த இரண்டு எறிகணைகள் நேற்று பிற்பகல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

பளைப் பிரதேச வைத்தியசாலையின் பின் புறப் பகுதியில் உள்ள் பற்றைக் காடுகளைத் துப்புரவாக்கும் வேலைகள் நேற்று நடைபெற்ற போதே அதிசக்தி வாய்ந்த எறிகணை குண்டுகள் இரண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதில் ஒன்று பல்குழல் எறிகணைக்குப் பயன்படுத்தும் எறிகணை எனவும், மற்றையது ஆட்லறி எறிகணைக்குப் பயன் படுத்தும் எறிகணைக்குண்டு எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த இரண்டு எறிகணைக் குண்டுகளையும் மீட்பதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றத்தின் உத்தரவுபெறப்பட வேண்டியுள்ள நிலையில் நேற்றுவரை எறிகணை குண்டுகளை சுற்றி பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றதன் பின்னர் விசேட அதிரடிப்படைப் பிரிவின் விசேட குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினால் எறிகணைகள் மீட்கப்பட்டு அவை செயலிழக்கச் செய்யப்படவுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

# இன்றும்...

யில் அதிகரிப்பு ஏற்படும்.

பல பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும், களுத்துறை மாவட்டத்தின் பல இடங்களிலும் 150 மில்லிமீற்றர் வரையிலான கடும் மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மேல், வட மேல் மற்றும் வட மத்திய மாகாணத்திலும், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத் 23


## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை முத்துமாரி அம்மன் கோவில் வீதியில் (உடையார் வளவு லேன்) 3 பரப்பு காணியுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 312 6637 (C-9477)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

UK - 550/= (C-9462)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே



V2 TRAVELS-0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## வேலை வாய்ப்புக்கள்

DYNAMIC HOLDINGS (LANKA) Pvt LTD நிறுவனம் வடக்கில் ஆரம்பிக்கப்படவிருக்கும் 6 பதவிகளுக்கு O/L, A/L படித்தவர்கள் தேவை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டத்தினர் விரும்பத்தக்கது. வயதெல்லை - 18 - 30 தங்குமிடவசதியுண்டு. சம்பளம் ரூ. 20,000 - 30,000

தொடர்பு : 077 230 2795 021 567 9001 (283)

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் நல்ல சூழலில் வீடு வாடகைக்கு உண்டு. (அரச, வங்கி உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு : 077 942 6746 (287)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் - யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

காட்டுக்கல்லு விற்பனைக்குண்டு. தேவையானோர் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 021 222 2476 (C-9476)

## V2 TRAVELS

PASSPORT

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்டென்சன்)

0768227499 (C-9464)

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## காசி யாத்திரை

ஆரம்பம் - 15.09.2017 யாத்திரீகர் 10 நாட்கள் - 10

தரிசிக்குமிடங்கள் : டெல்லி நாராயணர் கோவில், வேறு இடங்களும், காசியில் - 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத் (கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சீத்தாமடி, ஆக்ரா தாஜ்மகால், மதுரா, கிருஸ்ணஜென்ம பூமி, பிரேம்மந்திர், பிரம்மாண்டமான கிருஷ்ணர் கோவில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திரகோச மங்கை, திருப்புவாணி, நவபாஷாணம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணி மண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.

1 நாள் சென்னையில் சொப்பிங்

பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு மேது சேவை. 4 விமான பயண ரிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த உணவு, காப்பி, டீ, குடிநீர் 2 பேருக்கு கட்டில், மெத்தை வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்கு செய்து தரப்படும். பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு :- கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்,

59. 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11

T.P: 0777 680 102, 0777 362 154 (C-9475)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500 (C-9472)

அண்ணா அன் கோ 976, கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி 021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் மூலம் அனுப்பிடலாம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்

யாழ்ப்பாணம் | வல்வெட்டித்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

## கீழ்வரும் பதவிகளுக்கு ஆள்தேவை

- ஆசிரியர் (ஆரம்பப்பிரிவு)
- அலுவலக முகாமையாளர்
- அலுவலக எழுதுநர்
- கணனிப்பதிப்பாளர்
- அலுவலக உதவியாளர்

(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)

## யாழ் கல்லூரி

0775937366 கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

0778448763 பொன்னையா வேலி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

- கடிதம் மூலமோ நேரடியாகவோ சுயவிபரத்தை 03.09.2017க்குள் கிடைக்கச் செய்யவும். (C-9470)

## AFTER A/L

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

Approved Certificate வேலைவாய்ப்பு உத்தரவாதம்

13th Batch : 09-Sep-2017

77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

ICS EDUCATION 021-7305009, 076-7013060 (C-9473)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.